# எதிரொலி
ETHIROLI
ஆஸ்திரேலியா

குரல் 09 அதிர்வு 106 சித்திரை 2026 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198


# மண்டியிடா பாரசீகம்











ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம்
## 'டன்டினொங்' இல்
## புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව சம்பத் வங்கி Sampath Bank
UNION BANK
Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

# GRACE GROCERY

## INDIAN AND SRILANKAN GROCERY

**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026

# ராவணனின் மாட்சியும் நல்லோர் வீழ்ச்சியும்





ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

Alice in wonderland எனும் நாவலில் வரும் ஒரு காட்சியை இங்கே மேற்கோள் காட்டலாமென்று நினைக்கிறேன். "நான் ஒரு வார்த்தையைப் பயன்படுத்தும்போது, அதற்கு நான் என்ன அர்த்தம் கொடுக்க விரும்புகிறேனோ, அதுதான் அர்த்தம் - அதற்கு கொஞ்சமும் கூடவோ குறையவோ இல்லை," என்று ஹம்ப்டி டம்ப்டி ஆலிஸிடம் சொல்வான். அதற்கு ஆலிஸ், "என் கேள்வியெல்லாம் உங்களால் வார்த்தைகளுக்கு இத்தனை விதமான அர்த்தங்களைக் கொடுக்க முடியுமா என்பதுதான்."

அதற்கு ஹம்ப்டி டம்ப்டி "என் கேள்வியெல்லாம் இந்த வார்த்தைகளுக்கு யார் எஜமானர் என்பது மட்டுமே, " என்றான் . இதற்கு என்ன அர்த்தம் என்பதை இந்தக் கட்டுரையின் இறுதியில் சொல்கிறேன்.

சென்ற மாதம் உகரம் இணைய இதழில் இதயம் பேசுகிறது என்ற பகுதியில் ராவணன் நமது முப்பாட்டன் தானா எனும் தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. அதில் சொல்லப்பட்ட சில விஷயங்களில் உடன்பாடில்லை. ராவணனைப் பற்றி நான் மட்டுமல்ல நாம் அனைவரும் அறிந்தது கம்ப ராமாயணத்தின் மூலம் தான். கம்பன் காட்டும் ராவணனைப் பற்றி

அ. ச.ஞானசம்பந்தன் எழுதிய " இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும் " என்ற புத்தகத்தை படித்திருக்கிறேன். அதில் நான் உணர்ந்த ராவணனிற்கும்,இந்தக் கட்டுரையில் கொடியவனாக சித்தரிக்கப்படும் இராவணனிற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அந்த வேறுபாடுகளை சுட்டிக்காட்டுவது எனது கடமை. அதன் விளைவே இந்தக் கட்டுரை.

1. இராவணன்தான் நம் தமிழர்களின் மூதாதையனா?

"இராவணன் கயிலை மலைக்குள் அகப்பட்டுக் கொள்கிறான். அப்போது அவன் சிவனை நோக்கி. சாமவேதத்தைப் பாடினான். அவன் வேதத்தை பாடியதால் தமிழன் இல்லை"

இந்த வாதம் எப்படி சரியாகும் என்று தெரியவில்லை. நம் கோவில்களில் பூஜிக்கும் மந்திரங்களும் , பூஜிப்பவர்களும் வேதத்தில் தான் பாடுகின்றனர். ஆகையால் யாராவது சமஸ்கிருதத்தில் தொழுதால் அவர்கள் தமிழர் இல்லை என்று ஆகிவிடுமா. அப்படி பார்த்தால் அனைத்து அந்தணர்களும் வேதத்தில் பாடுவதால் அவர்கள் தமிழர் அல்லர் என்று சொல்ல முடியுமா ?

2. இராவணன் உண்மைத் திராவிடனா?

" சூர்ப்பனகையிடம் ," நீ அந்தணப்பெண் நான், சத்திரியன். ஆகையால், இந்த வர்ண வேறுபாட்டின் காரணமாக நான் உன்னை ஏற்க முடியாது" என்று சொன்னதாலும் ,ராவணன் பிரம்மன் வழி குலப்பிறப்பில் வந்ததாலும் அவன் பிராமணன் . ஆகையால் அவன் ஆரியன் ,திராவிடனாக இருக்க முடியாது

இந்த வாதத்திற்கு பதிலளிக்க அ.ச .ஞா .அவர்களின் வரிகளையே சொல்கிறேன். "இராவணன் ஆரியனா அல்லது தமிழனா (திராவிடனா) என்பது போன்ற வினாக்கள் இடப் பொருத்தமற்றவை. இலக்கிய ரீதியாக ஒரு பாத்திரத்தைப் பார்க்கும்போது இத்தகைய இன அடையாளங்கள் அவசியமற்றவை.இராவணன் தமிழனா அல்லது ஆரியனா என்ற கேள்விகள் அநாவசியமானவை. இவற்றுக்கு விடை காண வேண்டுமென்றால் பழைய சரித்திரத்தைத் தேட வேண்டுமே தவிர, கம்பராமாயணம் போன்ற இலக்கியத்தைத் தேடிப் பயனில்லை" .

3. இராவணன் சிறந்த ஒழுக்கசீலனா?

"இராமாயணச் செய்திகள் பதிவாக்கியுள்ள எந்த இலக்கியமும் இராவணனை, அறவழிப்பட்டவனாகவோ, நல்லவனாகவோ, ஒழுக்கமுள்ளவனாகவோ காட்டாததோடு மேற்கருத்துகளுக்கு எதிர்மாறான கீழ்மைப் பண்புடைய ஒருவனாகவே அவனைக் காட்டுகின்றன. என்கிறார் "

" நீ அயன் முதற்குலம் இதற்கு ஒருவன் நின்றாய்

ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தாய் " - பிரம்மனின் முதற்குலத்தில் ஒப்பற்றவனாகத் தோன்றியவன் நீ ஆயிரம் வேதங்களின் பொருளையும் உணர்ந்து அறிவு நிரம்பியவன் நீ என்று ராவணனின் தம்பி விபீடணன் பாடுகிறான்.

"போரிடை மீண்டும் ஒருவருக்கும் புறங்கொடாய் போர்வீரன் " - இறுதிப் போரில் வீழ்ந்தாலும், ஒருபோதும் பகைவனுக்குப் புறங்காட்டி ஓடாத சிறந்த போர்வீரனாக இராவணன் திகழ்ந்தான். இராவணன் சிறந்த சிவபக்தன் என்பதோடு, இசையிலும் வல்லவன். யாழ்க்கொடி ஏந்தி, அகத்தியரோடு இசையில் போட்டி போட்ட கலைஞனாகவும் கம்பன் காட்டுகிறான்.

இத்தகைய நற்பண்புகள் நிறைந்த இராவணன், சீதையின் மேல் கொண்ட முறையற்ற காமத்தால் (பிறன் மனை நயத்தல்) தனது அனைத்துப் பெருமைகளையும் இழந்து வீழ்ச்சியடைந்தான் என்பதே கம்பராமாயணம் சொல்லும் செய்தி. இராவணன் செய்தது சரியென்று வாதிடவில்லை. மனிதனாக பிறந்துவிட்டால் தவறு செய்வதென்பது இயல்பு. அவன் தெரிந்து செய்த தவறிற்காக அவன் முற்றிலும் ஒழுக்கமற்றவன் என்று வாதிடுவது அழகன்று.

4. இராவணன் மாறாத இனப்பற்றாளனா?

"தனது காமத்திற்காக, இளவயதில் இருந்தவர்களான தனது புதல்வர்களை, அவர்கள் எடுத்துச் சொல்லியும் கேளாமல், போருக்கு அனுப்பி மாளச்செய்த இராவணனை, இனப்பற்றாளன் என எவரும் உரைப்பின், உலகம் அவரைக் கண்டு நகைக்கவே செய்யும்." என்கிறார்.

"தந்தேன் பிரியேன் தனிபோகத் தாழ்க்கிலேன்

வந்தேன் தொடர் மதக்களிறே! வந்தேனால் " - "என் தம்பியே! உன்னைப் பிரிந்து நான் இருக்க மாட்டேன். நீ மட்டும் தனியாகப் போவதைப் பார்த்துக் கொண்டு நான் இங்கிருக்க மாட்டேன். இதோ உன் பின்னே நானும் வந்துவிட்டேன்" என்று கூறி இராவணன் பாசத்தால் உருகுகிறான்

அவ்வழி இராவணன் அனைத்து நாட்டமும்

செவ்வழி ரோடும் குருதி தேக்கினான்" - தம்பியின் மரணச் செய்தியைக் கேட்டவுடன், இராவணனின் கண்கள் சிவந்து ரத்தம் போன்ற கண்ணீரைச் சிந்தின என்கிறான் கம்பன்.

சுருக்கமாகச் சொன்னால், இராவணன் காமத்தினால் வீழ்ந்தாலும், அவன் ஒரு சிறந்த குடும்பத்தலைவனாகவும், தனது சுற்றத்தார் மேல் மிகுந்த பாசமுடையவனாகவுமே கம்பனால் படைக்கப்பட்டுள்ளான். இப்படி இருக்கும்போது அவன் இனப்பற்றாளன் அல்ல என்று எப்படி சொல்ல முடியும். அவனது தனிப்பட்ட தீயொழுக்கம் (பிறன் மனை நயத்தல்) அவனது ஒட்டுமொத்த இனத்தின் அழிவிற்கும், பழிக்கும் காரணமாக அமைந்தது அன்று அவன் இனத்தில் மேல் பற்றற்று இருந்தான் என்று கம்பன் எங்குமே சொல்லவில்லை.

5. இராவணன் சிறந்த சிவபக்தனா?

"இராவணனை திருஞானசம்பந்தர், தனது எட்டாவது பாடல்களில் அமைத்துப்பாடியது, அவனது பெருமை நோக்கி அன்றாம். சிவபெருமான் பிழை செய்தவர்க்கும் அருள் செய்வான் என்பதை, உணர்த்துதற்கே என்கிறார் நம் சேக்கிழார். ஆகையால் இராவணன் ஒரு சிவபக்தன் அல்ல "

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய

பெருந்தவமும் முதல்வன் முன்னாள்

எக்கோடி யாராலும் வெலப்படாய்'

எனக்கொடுத்த வரமும் ஏனைத்

திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த புய". - மூன்று கோடி ஆண்டுகள் வாழும் ஆயுளும், விடாமுயற்சியால் அவன் செய்த பெரிய தவமும், "எந்தக் கோடியைச் சேர்ந்தவர்களாலும் நீ வெல்லப்பட மாட்டாய்" என்று இறைவன் சிவபெருமான் அவனுக்கு அளித்த வரமும், திக்குகள் அனைத்தையும் வென்ற அவனது தோள் வலிமையும் ஈடு இணையற்றவை என்கிறான் கம்பன்.

சிவபக்தனாக இல்லாமல் எப்படி ராவணனுக்கு சிவபெருமான் வரமளித்தார் ?. சிவபெருமான் எல்லோருக்கும் வரம் கொடுப்பாரென்றால் , அவரிடம் வரம் வாங்கியவர்கள் எல்லாம் சிவபக்தர்கள் இல்லையா. ? கம்பன் காட்டும் இராவணன் சிறந்த சிவபக்தன். இருப்பினும், அவன் பெற்ற வரங்களினால் ஏற்பட்ட செருக்கு பிற்காலத்தில் அவனது வீழ்ச்சிக்கு அடிகோலியது என்றும் கம்பன் சொல்கிறான்.

திராவிடர் கழகத்தினர் இராவணனைத் தூக்கி பிடிக்கின்றனர் மற்றும் ராவண காவியம் இயற்றி அவனை கொண்டாடி வருகின்றனர் என்பதனால் ராவணனை நாம் ஏன் வெறுக்க வேண்டும்? இராவணன் நம் எல்லோரையும் போல பல குறைகளை உடையவன். ராமன் மேல் குறைகள் இல்லையா. வாலி வதைப் படலம் முழுவதுமே ராமனின் மற்றொரு பக்கத்தை கம்பன் காட்டுகிறான் அல்லவா. வாலியை ஒளிந்து நின்று கொன்றான் என்பதற்காக நாம் ராமனை வெறுக்க முடியுமா ? ஹம்ப்டி டம்ப்டி சொல்வது போல வார்த்தைகளின் அர்த்தத்தை அதன் எஜமானர்களே தீர்மானிக்கின்றனர். ராவணன் தீயவன் என்று நிறுவுவதில் என்ன இருக்கிறது ?

அ.ச .ஞா . வார்த்தைகளை கொண்டு இந்தக் கட்டுரையை நிறைவு செய்கிறேன். "கம்பராமாயணத்தில் காணப்படும் இராமன், கம்பன் ஆக்கிய இராமன் ஆவான் அவ்வாறே இராவணனும். இராமனைப் படைத்த அதே கம்பன் தான் இராவணனையும் படைத்துள்ளான் எனவே இவர்கள் இருவருமே கம்பன் பெற்ற பிள்ளைகள்,. கம்பன் தான் பெற்ற இந்த இரு பிள்ளைகளையும் என்ன கருத்தோடு, என்ன சூழலில் செயல்பட வைக்கிறான் என்பதை உணர்ந்து படிப்பதே முறை "அதனை விட்டுவிட்டு இராவணன் திராவிடனா, தமிழனா, ஆரியனா என்று நமக்குள்ளே சண்டை போடுவது பிழையன்றோ?


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 106 சித்திரை 2026 தொ.பே:1800 960 162

# ஈழ மண்ணின் ‘காகிதப்புலி’

இலங்கை அரசியலில் அண்மைக்காலமாகத் தோன்றி மறைந்த பல சர்ச்சைக்குரிய கதாபாத்திரங்களுக்கு மத்தியில், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ஒரு தனித்துவமான ‘அரசியல் ஜந்துவாக’ உருவெடுத்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் எப்படியாவது பேசுபொருளாக இருக்க வேண்டும் என்பதற்காக எதையும் செய்யத் துணியும் இவரின் போக்கு, தற்போது வடக்கு மற்றும் மலையகத் தமிழர்களுக்கு இடையிலான உறவில் நஞ்சைக் கக்கும் நிலையை எட்டியுள்ளது.

தான் ஒரு கற்றவர் என்று மார்தட்டிக் கொள்ளும் இவரிடம், கற்றவருக்குரிய குறைந்தபட்சப் பண்புகள் கூட இல்லை என்பது ‘செல்லுமிடமெல்லாம் செருப்படி’ படும் நிலையிலிருந்தே தெளிவாகின்றது.

கிளிநொச்சியில் மலையகத் தமிழர்களை ‘மலைநாட்டான்’ என ஏளனப்படுத்தி அர்ச்சுனா வெளியிட்ட கருத்து, அவரது அரசியல் வங்குரோத்து நிலையைத் தோலுரித்துக் காட்டியுள்ளது.

1983 இனக்கலவரம் மற்றும் தொடர்ச்சியான அடக்குமுறைகளால் மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து வடக்கு மற்றும் கிழக்கில் குடியேறிய மக்கள், அம்மண்ணை தமது வியர்வையாலும் உழைப்பாலும் வளமாக்கியவர்கள். வடக்கு மக்களுடன் உணர்வுப்பூர்வமாக ஒன்றிணைந்த அவர்கள், ஒருபோதும் பிரதேச வாதத்தைப் பேசியதில்லை.

அர்ச்சுனா தன்னை ஒரு கல்வியலாளர் என்று கூறிக் கொண்டாலும், ஈழத் தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையிலான ஆழமான பிணைப்புக் குறித்து அவருக்கு எதுவுமே தெரியவில்லை என்பது நகைப்புக்குரியது.

மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது, அதற்கு எதிராகக் குரல் கொடுத்தே இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவானது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவானபோது, அதன் இணைத்தலைவராக மலையகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் கௌரவிக்கப்பட்டார்.

கிளிநொச்சி மண்ணில் மாவீரர்களாகத் துயிலும் மலையக உறவுகளின் வரலாறு அர்ச்சுனாவுக்குத் தெரிய வாய்ப்பில்லை. விடுதலைப் புலிகள் முன்வைத்த அரசியல் தீர்வுத் திட்டங்களிலும் மலையக மக்களின் நலன்கள் உள்வாங்கப்பட்டிருந்தன.

தன்னை ஒரு ‘புலி’ என அடையாளப்படுத்திக்கொள்ள முயலும் அர்ச்சுனா, இந்த வரலாறுகளைத் தெரிந்திருந்தால் இவ்வளவு கேவலமாகப் பேசியிருக்க மாட்டார். உண்மை என்னவென்றால், அவர் ஒரு ‘காகிதப்புலி’ மாத்திரமே.


தமிழர்கள் மத்தியில் ஒற்றுமை என்பதே தற்போது எஞ்சியிருக்கும் ஒரே வலிமையான ஆயுதம். அந்த ஒற்றுமையைச் சிதைப்பதன் மூலம் பேரினவாதிகளின் நீண்டகாலக் கனவை நனவாக்க அர்ச்சுனா போன்றவர்கள் கைக்கூலிகளாகச் செயற்படுகிறார்களோ என்ற பலமான சந்தேகம் எழுகின்றது. தனிநபர்களைச் சேறுபூசி மகிழ்ந்தவர், இன்று ஒரு ஒட்டுமொத்தச் சமூகத்தையே கொச்சைப்படுத்தத் துணிந்துள்ளார்.

அர்ச்சுனா போன்றவர்களின் அரசியல் பிழைப்புக்குத் தீனி போடுவது புலம்பெயர் தேசங்களிலிருந்து வரும் நிதியுதவிகள்தான். மலையகத் தமிழர்களை இழிவாகப் பேசிய பிறகும், புலம்பெயர் தமிழ் சமூகம் காட்டும் மௌனம் கவலைக்குரியது.

சிலர் இவரை ஒரு ‘காமெடி பீஸாக’ கருதி வேடிக்கை பார்க்கலாம். ஆனால், ஒரு நச்சு ஜந்துவைத் தவறாக வளர்த்து வருவது ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்கே பேராபத்தாக முடியும். நகைச்சுவைக்காகப் பார்க்கப்படும் ஒரு கதாபாத்திரம், இனப்பகையைத் தூண்டும்போது அதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

தான் வெளியிட்ட கருத்துக்காக மலையகத் தமிழர்களிடம் அர்ச்சுனா மன்னிப்புகேட்டு வெளியிட்ட காணொலியில்கூட அவரது முகபாவம் எதை வெளிப்படுத்தியது என்பது குழந்தைக்குகூட தெரிந்திருக்கும்.

அரசியல் அதிகாரம் என்பது அறிவாலும், பண்பாலும் பெறப்பட வேண்டியது அருவருப்பான பேச்சுகளால் அல்ல. மலையக மக்கள் இந்த நாட்டின் முதுகெலும்பு மட்டுமல்ல, தமிழ் தேசியப் பரப்பின் பிரிக்க முடியாத அங்கமும் கூட. அவர்களைச் சீண்டுவது என்பது தமிழ் இனத்தின் ஒரு கையைத் தானே வெட்டுவதற்குச் சமம். அர்ச்சுனா போன்றவர்கள் வீசும் ‘பிரதேச வாத’ விஷத்தை மக்கள் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டிய தருணம் இது.



# மண்டியிடா பாரசீகம்:

## அமெரிக்கப் பேரரசின் வீழ்ச்சியும் ஈரானிய மக்களின் தார்மீக வெற்றியும்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலகத்தின் பொலிஸ்காரனாகத் தன்னைத் தானே பிம்பப்படுத்திக் கொண்ட அமெரிக்காவின் முகத்திரை இன்று கிழிந்திருக்கிறது. ஈரான் மீது டொனால்ட் ட்ரம்ப் விடுத்த அநாகரிகமான அச்சுறுத்தல்கள், நவீன இராஜதந்திர வரலாற்றில் ஒரு அழியாத கறையாக மாறியுள்ளன. தற்காலிகப் போர்நிறுத்தம் ஏற்பட்டிருந்தாலும், ஹார்முஸ் நீரிணையைச் சுற்றியுள்ள பதற்றம் இன்னும் தணிந்தபாடில்லை.

### வெற்றி பெறாத அமெரிக்கா.. தோற்காத ஈரான்!

யுத்த தர்மத்தின்படி, ஒரு வல்லரசு தான் நினைத்ததைச் சாதிக்கவில்லை எனில் அது தோல்வியே. அதேசமயம் ஒரு சிறிய நாடு தன்னைத் தகர்க்க வந்த பேரரசிடம் வீழாமல் நிலைத்து நின்றாலே அது வெற்றியே!

ஈரானை முழுமையாகக் கட்டுப்படுத்தலாம் என அமெரிக்காவும் இஸ்ரேலும் போட்ட கணக்குகள் தவிடுபொடியாகின. ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியதால் ஏற்பட்ட உலகளாவிய எரிபொருள் தட்டுப்பாடும், பொருளாதார நெருக்கடியும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டை மீறிச் சென்றன. ஈரானின் புவியியல் பலத்தையும் அதன் தனித்துவமான போர் வியூகங்களையும் கணிக்கத் தவறிய அமெரிக்கா, இன்று தனது சொந்தக் கண்ணையே குத்திக்கொண்டிருக்கிறது.

### வல்லாதிக்க ஆணவத்தின் சரிவு

அமெரிக்கா தனது சக்தியைப் பறைசாற்றப் போய், இறுதியில் தனது பலவீனத்தையே உலகிற்கு அம்பலப்படுத்தியுள்ளது. கொரியா, வியட்நாம், ஈராக் எனத் தொடர்ச்சியான வரலாற்றுத் தோல்விகளிலிருந்து பாடம் கற்கத் தவறியதே இந்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு அடிகோலியுள்ளது. அமெரிக்கா மீதான சர்வதேச நம்பிக்கையைச் சிதறடித்த இந்தப் போர், உலக அரங்கில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்தப் பெரும் வாய்ப்பாக அமைந்தது.

(07ஆம் பக்கம் பாரக்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# மண்டியிடா பாரசீகம்:

## அமெரிக்கப் பேரரசின் வீழ்ச்சியும் ஈரானிய மக்களின் தார்மீக வெற்றியும்!



(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானை ஒரு 'செத்த பாம்பாக' எண்ணித் தொடர்ந்து தாக்கின. ஆனால், இன்று தெஹ்ரான் முன்னெப்போதும் இல்லாத வகையில் வலுப்பெற்றுள்ளது.

**ஈரான் மக்கள் காட்டிய 'ஒளியின் கவசம்'**

ட்ரம்ப் 'முழுமையான அழிவு' என மிரட்டிய அந்தப் பயங்கரமான இரவுகளில், ஈரான் மக்கள் பயத்தின் இருளுக்குள் ஓடியொளியவில்லை. மாறாக, மனித மதில் சுவர்களாக மாறித் தங்களைத் தாக்குதலுக்கான இலக்குகளாக முன்னிறுத்தினார்கள்.

தபியத் பாலம் நள்ளிரவு இசை மேடையாக மாறியது. உலகமே மரண பயத்தில் உறைந்திருக்க, ஈரானியக் கலைஞர்கள் தார் இசையின் தாளங்களுக்கு நடனமாடினர். இது அழிவுக்கு எதிரான ஒரு மகத்தான பண்பாட்டு எழுச்சி.

"Power Plant Day" என அமெரிக்கா குறிவைத்த மின் நிலையங்களைச் சுற்றி மக்கள் மனிதச் சங்கிலிகளாக நின்றனர்.

புஷேர் அணு உலைக்குச் செல்லும் சாலைகளில் பிரம்மாண்டமான அமைதிச் செய்திகளை வரைந்தனர். அவை வான்வெளியில் பறந்த அமெரிக்க விமானிகளுக்கு ஈரானின் ஆன்மாவைப் பறைசாற்றின.

கெர்மான்ஷா முதல் அஹ்வாஸ் வரை மக்கள் ஏந்திய மெழுகுவர்த்தி வெளிச்சம், வான்வழித் தாக்குதலின் தர்க்கத்தைச் செயலிழக்கச் செய்தது. அலி காம்சாரி போன்ற கலைஞர்கள் தெருக்களில் மக்களுடன் இணைந்து முழக்கமிட்டனர். சுமார் ஒன்றரைக் கோடி மக்கள் ஒரே இரவில் திரண்ட அந்தத் தருணம், 21-ஆம் நூற்றாண்டின் மறக்க முடியாத வீர வரலாறு!

**இராஜதந்திரத் தோல்வியும் மனித நேயமும்**

அமெரிக்கத் தலைவரின் வாயிலிருந்து வெறுப்புப் பேச்சுகள் வெளிப்பட்ட அதே வேளையில், ஈரான் அதிபரின் உரைகள் நாகரிகமான இராஜதந்திரத்தால் உலகைக் கவர்ந்தன. அமெரிக்க மக்களுக்கு ஈரான் அதிபர் எழுதிய அந்த உருக்கமான கடிதம், அநாகரிகமான மிரட்டல்களுக்கு வழங்கப்பட்ட மிகச் சிறந்த பதிலாக அமைந்தது.

யுத்தம் என்பது ஒருபோதும் தீர்வாகாது. மதம், இனம், மொழி என மனிதன் உருவாக்கிய அடையாளங்கள் ஒருபுறம் இருந்தாலும், 'உயிர்' என்பது இயற்கை தந்த உன்னத அடையாளம். அதை மதிப்பதே உண்மையான அறம். அப்பாவி மக்களின் தியாகமும், பாரசீக மக்களின் அசையாத உறுதியும் இன்று அமெரிக்காவிற்கு ஒரு பாடத்தைப் புகட்டியிருக்கின்றன: "அன்பையும் மனிதாபிமானத்தையும் எத்தகைய அதிநவீன ஏவுகணைகளாலும் அழித்துவிட முடியாது!" என்பதே அந்தப்பாடம்.

இனி அமெரிக்கா அமைதிப் பாதையைத் தேடுமா அல்லது மீண்டும் போர்வெறி கொண்டு அலையுமா என்பதை அமெரிக்க மக்களே தீர்மானிக்க வேண்டும்.


GREEN PARK BEACH HOTEL – PROPERTY FOR SALE

Property Details:

Land Area:
34 perches
(Hotel building – 22 perches,
Car parking – 12 perches)

Accommodation:
18 rooms with air conditioning, cable/satellite TV, wireless internet, feather/down pillows, linens, tub, bath sheets, and dressing gowns

Restaurant: Seats 100, offering a range of Asian dishes à la carte



Overview:
- Green Park Beach Hotel is a beachfront property in Trincomalee, offering 18 fully equipped rooms and modern amenities for guests. The hotel is conveniently located:
- 350 metres from St Mary's Cathedral
- 4.4 km from Sober Island
- Close to Maritime and Naval History Museum and Trincomalee reef
- 10 minutes' walk from the town center
- Short drive to Elephant Ridge and Trincomalee train station






This property combines prime location, beachfront access, and a ready-to-operate hotel, making it an attractive investment opportunity

Address: 312 Dyke Street, Trincomalee, Sri Lanka
Contact:+94 76 271 2409 | greenparktco@live.com

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# ஆட்டம் காணும் விமான சேவை நிறுவனங்கள்!

ஆஸ்திரேலியாவின் முன்னணி விமான நிறுவனங்களான வர்ஜின் ஆஸ்திரேலியா (Virgin Australia) மற்றும் குவாண்டாஸ் (Qantas) ஆகியவை விமான சேவைகளைக் குறைக்கவும், பயணக் கட்டணங்களை உயர்த்தவும் முடிவு செய்துள்ளன.

எரிபொருள் விலை உயர்வு மற்றும் சர்வதேச விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகவே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2025-2026 நிதியாண்டின் இரண்டாம் பாதியில், எரிபொருள் செலவு எதிர்பார்த்ததை விட $30 மில்லியன் முதல் $40 மில்லியன் வரை அதிகரிக்கும் என அந்நிறுவனம் கணித்துள்ளது.

ஜூன் 30 வரை உள்நாட்டு விமான சேவைகளின் கொள்ளளவு 1% குறைக்கப்படும்.

ஒரு இருக்கைக்கான வருவாயை 3-4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது.

2026 பிப்ரவரி இறுதியில் இருந்து விமான எரிபொருள் விலை இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளதே




இதற்கு முக்கியமான காரணமாகக் கூறப்படுகிறது.

குவாண்டாஸ் நிறுவனம் தனது உள்நாட்டு விமான சேவை கொள்ளளவை 5% குறைத்துள்ளது. இந்த நிதியாண்டின் இரண்டாம் பாதியில் எரிபொருளுக்காக மட்டும் $3.1 பில்லியன் முதல் $3.3 பில்லியன் வரை செலவிட நேரிடும் எனத் தெரிகிறது.

ஒரு பரல் சுத்திகரிப்பு செலவு $20-லிருந்து $120-ஆக உயர்ந்துள்ளது, இது நிறுவனத்திற்கு $500 மில்லியன் முதல் $800 மில்லியன் வரை இழப்பை ஏற்படுத்தலாம்.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்கள் காரணமாக சர்வதேச விமான வழித்தடங்களிலும் மாற்றங்களைச் செய்துள்ளது.

இந்த மாற்றங்களால் வரும் காலங்களில் விமானக் கட்டணங்கள் கணிசமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எரிபொருள் சந்தையில் நிலவும் நிலையற்ற தன்மையை சமாளிக்க, விமான நிறுவனங்கள் தங்களது கட்டணக் கொள்கைகளை மாற்றி அமைத்து வருகின்றன.

ஏப்ரல் மற்றும் மே மாத இறுதி வரை எரிபொருள் விநியோகம் சீராக இருக்கும் என விநியோகஸ்தர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர், இருப்பினும் உலகளாவிய விநியோகச் சங்கிலி உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது.

## பெண் இராணுவத் தளபதி நியமனம்!



125 வருடகால ஆஸ்திரேலிய இராணுவ வரலாற்றில் முதன்முறையாக இராணுவத் தளபதி பதவிக்கு பெண்ணொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டுத் திறன்களுக்கான தளபதியாக (Chief of Joint Capabilities) பதவி வகிக்கும் சூசன் கோய்ல் (Susan Coyle), புதிய இராணுவத்தளபதியாகப் பொறுப் பேற்கவுள்ளார்.

அதேவேளை, ஆஸ்திரேலிய கடற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் மார்க் ஹம்மண்ட் (Mark Hammond), அடுத்த பாதுகாப்புப் படைத் தளபதியாக (Chief of Defence Force) நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய பாதுகாப்புப் படைத் தலைமைத் தளபதி அட்மிரல் டேவிட் ஜோன்ஸ்டன் மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சைமன் ஸ்டுவர்ட் ஆகியோர் தங்களது ஓய்வு முடிவை அறிவித்ததைத் தொடர்ந்து மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள Mark Hammond ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில், "எதிர்கால சவால்கள் நிறைந்த காலகட்டத்தில் இந்தப் புதிய பொறுப்பை ஏற்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்," என்று குறிப்பிட்டார்.



## சிங்கப்பூருடன் ஆஸி. ஒப்பந்தம்!

சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வோங் மற்றும் ஆஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானீஸி ஆகிய இரு தலைவர்களும் தங்களின் எரிசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் புதிய ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளனர்.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ப் பதற்றத்தால் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டாலும், ஆஸ்திரேலியாவிற்கு எரிபொருள் ஏற்றுமதி செய்வதை சிங்கப்பூர் நிறுத்தாது என்று பிரதமர் வோங் உறுதியளித்துள்ளார்.

இரு நாடுகளும் தங்களுக்குத் தேவையான எரிபொருள் மற்றும் எரிவாயு தேவைகளைப் பூர்த்தி செய்யப் பரஸ்பரம் ஒத்துழைப்பு வழங்க இந்த உடன்படிக்கை வகை செய்கிறது.

உலகளாவிய எரிசக்தி நெருக்கடியைச் சமாளிக்கவும், தங்களின் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்தவும் இந்தக் கூட்டு முயற்சி அவசியமானது என்று தலைவர்கள் கருதுகின்றனர்.

ஆஸ்திரேலியாவின் குறிப்பிடத்தக்க அளவிலான எரிபொருள் இறக்குமதிக்குச் சிங்கப்பூர் ஆதாரமாக இருப்பதால், இந்த வர்த்தக உறவு இரு நாடுகளுக்கும் மிக முக்கியமானது.

## கோடீஸ்வரக் குடும்பங்களுக்குள் சொத்துப் போர்



ஆஸ்திரேலியாவின் கோடீஸ்வர தொழில் அதிபரான ஜினா ரினேஹார்ட், பல தசாப்தங்களாக நீடித்த சட்டப் போராட்டத்தின் முடிவில் தனது இரும்புத் தாது வருவாயை மற்ற இரண்டு குடும்பங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

மேற்கு ஆஸ்திரேலிய நீதிமன்றம் வழங்கிய இந்த முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு, ஹோப் டவுன்ஸ் சுரங்கத் திட்டத்திலிருந்து கிடைக்கும் காப்புரிமைத் தொகையில் ரைட் புரோஸ்பெக்டிங் மற்றும் டி.எஃப்.டி ரோட்ஸ் ஆகிய நிறுவனங்களுக்குப் பங்கு உண்டு என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த கால ஒப்பந்த மீறல்கள் தொடர்பாகத் தொடரப்பட்ட இந்த வழக்கில், ரினேஹார்ட்டின் நிறுவனமான ஹான்காக் புரோஸ்பெக்டிங் தனது உரிமையை முழுமையாக நிலைநாட்ட முடியாமல் ஒரு பகுதி வெற்றியை மட்டுமே பெற்றுள்ளது.

இந்த மோதலில் ரினேஹார்ட்டின் பிள்ளைகளும் சம்பந்தப்பட்டதோடு, சுரங்க ஜாம்பவானான ரியோ டின்டோ நிறுவனமும் இந்தத் தீர்ப்பின் நிதித் தாக்கங்களை எதிர்கொள்ளும் நிலையில் உள்ளது.

நீண்ட காலமாக நிலுவையில் இருந்த இந்த நில உரிமைப் போர், ஆஸ்திரேலியாவின் மதிப்புமிக்க சுரங்க வளங்கள் மற்றும் பரம்பரைச் சொத்து விவகாரங்களில் ஒரு முக்கியத் திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட வாய்ப்புள்ளதால்,இந்தச் சட்டப் போராட்டம் மேலும் தொடரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## Freeman இற்கு உதவிய இருவர் கைது!

Freeman தலைமறைவாக இருந்த காலப் பகுதியில் அவருக்கு உதவினர் எனக் கூறப்படும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆணொருவரும், பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரு பொலிஸ் அதிகாரிகளை சுட்டுக் கொலை செய்த பிறகு Freeman தலைமறைவானார்.

சுமார் 7 மாதங்களுக்கு பிறகு அவர் அண்மையில் பொலிஸ் துப்பாக்கிச்சூட்டில் பலியானார்.

இந்நிலையில் அவர் தலைமறைவாக இருந்த காலத்தில் அவருக்கு உதவியவர்கள் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



இதன் ஓர் அங்கமாகவே இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்றும், அவர்கள் அவரது நண்பர்களாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

# போரை நடத்திய, தமிழ் மக்களைப் படுகொலைக்குள்ளாக்கிய ராஜபக்சவினருடன் இணைந்து செயற்பட்டது ஏன்?

## விளக்குகின்றார் முருகேசு சந்திரகுமார்

**தமிழ் அரசியற் கட்சிகளின் புதிய கூட்டாக உள்ளது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி DTNA. இதில் சமத்துவக் கட்சியும் ஒன்று. அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு சந்திரகுமார், நாற்பது ஆண்டுகளாக பல்வேறு நிலைகளிலான அரசியற் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறார். கடுமையாக விமர்சிக்கப்பட்டாலும் அதற்குக் கடுமையாக எதிர்வினையாற்றாத முறையில் தன்னுடைய அரசியல் நிலைப்பாட்டையும் நிதானத்தையும் கைக்கொள்ளும் தலைவர்களில் ஒருவராகத் தன்னை நிலைப்படுத்தியிருக்கிறார். சந்திரகுமாருடன் வடக்கு- கிழக்கின் அரசியல் சூழல், NPP அரசாங்கத்தின் செயற்பாடுகள், வடக்குக் கிழக்கில் NPP செல்வாக்கு, அதை எதிர்கொள்ளும் தமிழ்க்கட்சிகளின் நிலை, எதிர்காலத்தில் DTNP யின் செயற்பாடுகள் எனப் பலவற்றைப் பற்றி எதிரொலிக்காக வழங்கிய நேர்காணல் இது.**

**நேர்கண்டவர் - கருணாகரன்**

**கேள்வி: இனப்பிரச்சினைக்குத் தீர்வு, புதிய அரசியல் யாப்பு, பொருளாதார நெருக்கடியைச் சுமுகமாக்குதல், முறைமை மாற்றம் (System change) எனப் பல பிரகடனங்களைச் செய்து அதிகாரத்தைக் கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தின் ஆட்சி எப்படி உள்ளது?**

பதில் : ஒரு அரசாங்கத்தைப் பற்றிய விமர்சனத்தைப் பொதுமக்களிடம் கேட்பதே பொருத்தமானது. அவர்கள்தான் நேரடியாக அதனுடைய நன்மை - தீமைகளை அனுபவிப்பர்களும் உணர்ந்து கொள்கின்றவர்களும். அதனால் அவர்களுடைய விமர்சனமும் கருத்துகளும் அவர்களுடைய வாழ்க்கை அனுபவங்களுக்கு ஊடாக வரும். மேலும் அவர்களுடைய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் குறித்த ஆட்சித் தரப்பினால் நிறைவேற்றப்படுகின்றனவா இல்லையா என்பதை அவர்கள் இதயத்திலிருந்தே சொல்வார்கள். நான் ஒரு அரசியற் கட்சியைச் சேர்ந்தவன். என்னுடைய கருத்துகள் மக்கள் நிலைப்பட்டிருந்தாலும் அவை அரசியல் சார்புடையவை என்றே பெரும்பாலும் நோக்கப்படும். ஆகவே நாம் முன்வைக்கின்ற விமர்சனம் அல்லது அபிப்பிராயம் போன்றவற்றை 'அரச எதிர்ப்புக் கருத்துகள்' என்று நோக்கப்படுவதற்கான - சுருக்கப்படுவதற்கான - சாத்தியங்கள் அதிகமுண்டு. இருந்தாலும் ஒரு கட்சியின் தலைமைப் பொறுப்பில் செயலாற்றுகின்றவர் என்ற வகையில் பார்த்தால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அதனுடைய பிரகடனங்களிலிருந்து காப்பாற்றியிருப்பது டித்வா புயலும் ஈரான் - அமெரிக்க + இஸ்ரேல் யுத்தமும்தான். இவற்றைச் சாட்டி அல்லது இவற்றைக் காரணம் காட்டி தன்னுடைய அரசியல் பலவீனங்களையும் செயற்பாட்டுத் தவறுகளையும் NPP மறைத்துக் கொண்டிருக்கிறது. சிங்கள மக்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதைப் பற்றிச் சரியாகத் தெரியவில்லை. தமிழ் மக்களுடைய உணர்வில் முந்திய ஆட்சியாளர்களுக்கும் NPP க்கும் இடையில் குறிப்பிடக்கூடிய வித்தியாசங்களில்லை. அப்படி வித்தியாசங்கள் இருந்தாலும் அது முன்பு 'குமுதம்' இதழில் வரும் ஆறுவித்தியாசங்களைப்போல இனங்காணக் கடினமானதாகவே இருக்கும்.

உங்களுடைய கேள்வியில் உள்ள 'இனப்பிரச்சினைக்குத் தீர்வு', 'அரசியல் யாப்பு மாற்றம்', 'பொருளாதார நெருக்கடியைச் சுமுகமாக்குதல்', 'முறைமை மாற்றம்' (System change) பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) போன்றவற்றை NPP தன்னுடைய வேலைத்திட்டமாகச் செய்யத் தொடங்கியிருந்தால் இந்தக் கேள்வியே வேறாக மாறியிருக்கும். சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு (PTA) பதிலாக, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (Anti-Terrorism Act - ATA) அல்லது பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் (PSTA) போன்ற புதிய சட்டங்களைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆகவே எதுவுமே நல்லவையாக நடக்கவில்லை.

**கேள்வி: ஆனாலும் NPP க்கு தமிழ் மக்கள் மத்தியில் மதிப்பு உள்ளதல்லவா! கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஜனாதிபதி வடக்கே வந்தபோது அவரை மக்கள் உற்சாகமாக வரவேற்றதும் சமூக வலைத்தளங்களில் அவருடைய வருகையை பெருமிதமாக வெளிப்படுத்தியதையும் அவதானித்திருப்பீர்கள். உண்மையை மறைக்காமல் சொல்லுங்கள், ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்கு நிகரான தமிழ்த் தலைவர் ஒருவரை உங்களால் அடையாளப்படுத்த முடியுமா?**

பதில் : NPP யின் இன்றைய செல்வாக்கு என்பது 'அரகலய'வின் வெளிப்பாடு அல்லது அதனுடைய விளைவே ஆகும். ஏனைய சிங்களத் தலைவர்களையும் விட அநுரகுமார சற்று வித்தியாசனமானவர் என்றொரு தோற்றப்பாட்டை அரகலயவுக்குப் பிறகான சூழல் வெளிப்படுத்தியது. அதோடு முன்பிருந்த ஆட்சியாளர்கள், ஊழல் பேர்வழிகள் என்ற அடையாளமும் அநுரகுமாரவுக்கும் NPP க்கும் வாய்ப்பாகியது. 'அரகலய அலை' சிங்கள மக்களை மட்டுமல்ல, தமிழ் பேசும் பரப்பிலும் மெல்லிய ஈர்ப்பைக் கொடுத்திருந்தது. சமவேளையில் தமிழ் அரசியற் தரப்பில் உண்டாகிய தேக்கங்களும் குழப்பமான சூழலும் NPP க்கும் அநுரகுமார திசநாயக்கவுக்கும் வாய்ப்பாகியது.

ஆனால் இப்போது NPPயின் மீதான நம்பிக்கையும் அதற்கான மதிப்பும் பொதுவாகவே சரிந்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு நடந்த உள்ளூராட்சித் தேர்தல் இதற்குச் சான்று. மக்களிடம் சலிப்பும் நம்பிக்கையீனமும் தொடர்ந்து ஏற்படுவதை அவதானிக்கலாம். அரசாங்கம் எந்த முன்னேற்றத்தை அடையாளப்படுத்தியிருக்கிறது என்று உங்களால் சொல்ல முடியுமா? இதனால்தான் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் பின்னடிக்கிறது. மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்தினால் தன்னுடைய செல்வாக்கில் பின்னடைவு ஏற்பட்டுவிடும் என்ற பயம் அரசாங்கத்துக்குண்டு. இன்றைய அரசியல் நிலைவரத்தைப் பற்றி எதிர்த்தரப்புகளோடு பகிரங்க வெளியில் விவாதிப்பதற்கு NPP யில் எவரும் தயாரில்லை. ஆகவே NPP என்பது ஒரு soda Gas தான். அநுரகுமார ஒரு அழகிய வானவில் (Anura Kumara is a beautiful rainbow). அவ்வளவே.

**கேள்வி: இதொரு கடுமையான - மோசமான - விமர்சனம் என்றே பார்க்கிறேன். நாடு முழுவதும் மட்டுமல்ல, உலகமெங்கும் பரந்திருக்கின்ற இலங்கையர்களில் பெரும்பாலானவர்கள் அநுரகுமார மீது பெரிய நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். சர்வதேச சமூகமும் அநுரகுமாரவையும் அவருடைய அரசாங்கத்தையும் வரவேற்றுள்ளதை அவதானிக்கலாம். அப்படியான ஒருவரை நீங்கள் இப்படி வர்ணிக்கலாமா?**

பதில் : கடந்த காலத்தின் ஏமாற்றங்களும் கசப்புகளும் அநுரகுமாரவின் மீதான எதிர்பார்ப்புகளாகவும் நம்பிக்கைகளாகவும் மாறியது. அநுரகுமாரவும் அதற்கான முறையில் எளிமையாகவும் சாதாரண பின்புலத்தைக் கொண்ட குடும்பப் பின்னணியில் இருந்தும் வந்திருந்தார். ஜே.வி.பி.யும் தன்னை வெகு சாமர்த்தியமாக (சமயோசிதமாக) உருமறைத்துக் கொண்டு தேசிய மக்கள் சக்தி (NPP) யாக தோற்றம் காட்டியது. எல்லாம் இணைந்து உருவாகியதே நான் குறிப்பிட்ட 'வானவில்' காட்சியாகும். இதை மறுதலித்து NPP யும் அநுரகுமார திசநாயக்கவும் தம்மை நிரூபிப்பதாயின் தாங்கள் பிரகடனப்படுத்திய தேர்தல் விஞ்ஞாபனத்தைச் செயற்படுத்திக் காட்ட வேண்டும். நிஜத்தை நிரூபித்துக் காட்ட வேண்டும். இல்லையென்றால் 'வானவில்' என்ற கனவாகத்தான் இருக்கும் (They need to prove the reality. Otherwise, it will just be a 'rainbow' dream).

**கேள்வி: எதிர்த்தரப்பில் இருப்பதால் எதையும் எப்படியும் விமர்சிக்கலாம் என்று கருதுகிறீர்களா? நாட்டின் பெரும்பான்மை மக்களுடைய நம்பிக்கையையும் அரசாங்கத்தின் மீதான உறுதிப்பாட்டையும் நீங்கள் புறக்கணிப்பதாகவே கருதுகிறேன்.**

பதில்: அப்படி நீங்கள் எண்ணினால் உங்களுக்காக நான் அனுதாபம் கொள்ளத்தான் முடியும். நாம்



எதிர்த்தரப்பில் இருப்பதாக எப்படி உங்களால் சொல்ல முடியும்? நாம் மக்களின் தரப்பில் இருக்கிறோம். ஆட்சியாளர்கள் (NPP) தான் எதிர்த்தரப்பில் இருக்கிறார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பு மக்களின் தரப்பில் (இந்தப் பக்கமாக) நின்றவர்கள், அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் ஒரே நாளில் அந்தப் பக்கமாக - ஆட்சித்தரப்பினராக மாறி விட்டனர். அதாவது மக்களுக்கு எதிர்தரப்பாக மாறி விட்டனர். ஆனால், சரியான ஆட்சியாளர்கள் மக்களின் நலனிலும் பாதுகாப்பிலும் கரிசனை கொண்டிருப்பார்கள். அவர்கள் எப்போதும் மக்களின் தரப்பினராகவே இருப்பர்.

**கேள்வி: இப்படி நீங்கள் சொன்னாலும் மக்கள் தேசிய மக்கள் சக்தியைத் தம்முடன் நெருக்கமாகவே வைத்திருக்கிறார்கள் என்பதே உண்மை. உள்ளூராட்சித் தேர்தல்களில் வடக்கு-கிழக்கில் NPP இரண்டாம் நிலையில் உள்ளதே. நெருக்கடியிலும் வங்குரோத்து நிலையிலும் உள்ள அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவது மிகப் பெரிய சுமையும் பொறுப்பும் என்பதை ஏற்றுக் கொள்ள நீங்கள் மறுப்பது ஏன்?**

பதில் : நாட்டின் நெருக்கடி நிலையை இல்லாதொழிக்க வேண்டும். நாட்டின் சுமையைக் குறைக்க வேண்டும் என்றே நாமும் சிந்திக்கிறோம். நாட்டை முன்னேற்ற வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்கும் அமைதிக்கும் தடையாக இருக்கும் இன ஒடுக்குமுறைக்குத் தீர்வைக் காண வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். அதற்குத்தான் கட்டமைப்பு மாற்றம் (Structural change), முறைமை மாற்றம் (System change) வேண்டும் என்றெல்லாம் பேசப்பட்டது. மக்களும் அதற்கான ஆணையை வழங்கி விட்டனர். நாடாளுமன்றத்திலும் அதற்கான 2/3 பலம் உள்ளது. ஆனால் என்ன நடந்து கொண்டிருக்கிறது? நாடாளுமன்றத்தை விட்டு விட்டு மகாசங்கங்களை நோக்கிச் செல்கிறார் ஜனாதிபதி. தீர்வுகளை எட்டுவதற்கு மதபீடங்களில்தான் அனுமதியைப் பெற வேண்டும் என்றால், எதற்குத் தேர்தல்? எதற்கு நாடாளுமன்றம்? எதற்கு ஜனநாயகம் பற்றிய பேச்சுகளும் அமைதித்தீர்வைப் பற்றிய கட்டுக்கதைகளும். பழைய புண்களை அப்படியே வைத்துக் கொண்டு வெளியே தைலம் பூசுகிறார்கள்.

**கேள்வி: இப்படிக் கடுமையான விமர்சனத்தை NPP யின் மீதும் அநுரகுமார திசநாயக்கவின் மீதும் வைக்கிறீர்களே. ஒரு காலத்தில் நீங்கள் போரை நடத்திய, தமிழ் மக்களைப் படுகொலைக்குள்ளாக்கிய ராஜபக்சவினருடன் இணைந்து செயற்பட்டீர்கள் அல்லவா? அந்த ஆட்சியை விட NPP எந்த வகையில் மோசமானது?**

பதில் : அரசியற் கூட்டுகளும் விலகல்களும் மக்கள் நலனுக்கான அடிப்படையிலும் கட்சி நலன், தனி நபர்களின் நலன் என்ற அடிப்படையிலும் அமைவதுண்டு. நான் யுத்தம் முடிந்த பின்னரே நாட்டுக்குத் திரும்பியிருந்தேன். அன்று ஒரு நீண்ட யுத்தத்தினால் எமது பிரதேசங்களும் எமது மக்களும் சிதைந்தும் அழிந்தும் போயிருந்தனர். அதை மீளமைக்க வேண்டும் என்று விரும்பினேன். என்னைப் போன்ற பலர் அன்று தொடக்கம் இப்போது வரையில் மக்களுக்கான பணிகளைப் பல வழிகளில் செய்து வருகிறார்கள். 1980 களின் முற்பகுதியில் படிப்பை இடையில் நிறுத்தி விட்டு நானும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தவன். எமது போராட்டத்தினால் கிடைத்த வெற்றி தோல்விகளுக்கு நானும் ஒரு வகையில் பொறுப்பாளி. அப்போது இருந்த அரசாங்கம் சர்வதேச அழுத்தம், மனித உரிமை அமைப்புகளின் வலியுறுத்தல் உட்பட்ட பல காரணங்களுக்காக மீள் குடியேற்ற அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு என இரண்டு பிரத்தியேக அமைச்சுகளை உருவாக்கி, மீள்குடியேற்றத்தையும் புனர்வாழ்வுச் செயற்பாடுகளையும் மேற்கொண்டது. இதில் எமக்கு முழுமையான உடன்பாடோ திருப்தியோ கிடையாது. ஆனாலும் அன்றைய யதார்த்தத்தில் அந்த அரசாங்கத்தை வைத்தே நாம் பலவற்றை நிறைவேற்ற வேண்டியிருந்தது. இதில் உங்களுக்கு விமர்சனங்களோ மறுப்போ மாற்றுப் பார்வையோ இருக்கலாம். அப்படி நாம் செயற்பட்டதால்தான் நான் பிரதிநிதித்துவம் செய்த கிளிநொச்சியில் பல இராணுவ முகாம்களை விரைவாக விலக்க முடிந்தது. அந்த இடங்களில் பல நிறுவனங்களை உருவாக்க வாய்த்தது. இயக்கச்சி, பூநகரி 4 ஆம் கட்டை போன்ற இடங்களில் பாடசாலைகளில் முகாமிட்டிருந்த படையினரை விலக்கியது தொடக்கம், தற்போது கிளிநொச்சி - அறிவியல் நகரில் பல்கலைக்கழக பொறியியல், விவசாய, தொழில்நுட்ப பீடங்கள் இருக்கின்ற 600 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை படைகளிடமிருந்து மீட்டு அவற்றை உருவாக்க முடிந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் கிளிநொச்சியில் தற்பொழுது 6000 பேர் வரையில் பணியாற்றும் ஆடைத்தொழிற்சாலைகள், ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி, மத்திய வங்கியின் பிராந்தியப் பணிமனை, வனஜீவராசிகள், சுற்றுச் சூழல் அமைச்சு போன்றவற்றின் பிராந்தியப் பணியிடங்கள் எனப் பலவற்றையும் உருவாக்கினோம். போரினால் முற்றாகவே அழிந்திருந்த பாடசாலைகள், வீதிகள், மருத்துவமனைகள், மின்னிணைப்புகள், வீடமைப்புகள், பொதுக் கட்டடங்கள், குளங்கள் மற்றும் கால்வாய்கள் புனரமைப்பு, விவசாயத்துறை, மீன்பிடி, கூட்டுறவுத்துறை போன்றவற்றை மேம்படுத்தும் நடவடிக்கைகள் என பெரும்பாலான விடயங்களை விரைவாகச் செய்திருக்கிறோம். எவர் எல்லாவற்றையும் அழித்தனரோ அவர்களைக் கொண்டே மீளக் கட்டியெழுப்பினோம். அப்போது கிளிநொச்சிக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு முன்பும் இல்லை. பின்பும் இல்லை. இது ஒரு அரசியற் தந்திரோபாயம் இல்லையா?

அதேவேளை நான் தொடர்ந்தும் அந்தக் கூட்டுடன் இருக்கவில்லை. அந்தக் கூட்டின் காலம் அவ்வளவுதான். அதொரு முதலுதவிக் காலம். முதலுதவி என்பது சிகிச்சைக்கான நிரந்தரத் தீர்வு அல்ல. அதற்கு தொடர்ந்து வேலை செய்ய வேண்டும். அதற்கான இன்னொரு அணியில் இப்போது நாம் இணைந்து வேலை செய்கிறோம். அரசியற் கூட்டுகள் மக்களின் தேவைக்கானவை என்ற நிலைப்பாடு என்னுடையது. அதையே நாம் தேர்வு செய்கிறோம். அதைப் பகிரங்கமாகவே செய்து வருகிறோம். இரகசியக் கூட்டில் ஒருபோது நாம் கள்ள உறவாக இருப்பதில்லை.

இங்கே இன்னொன்றையும் பதிவு செய்ய விரும்புகிறேன். என்னுடைய அரசியல் தொடக்கம் அரசுக்கு எதிரான ஆயுதப்போராட்டமாகவே இருந்தது. இடையில் ஏற்பட்ட சூழலில் மக்களுக்கான தேவையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட அளவில் அரசுக்கு ஆதரவளித்திருக்கிறேன். இப்போது அரசை மீண்டும் எதிர்க்கிறேன். எல்லாமே காலத்தின் தேவைதான்.

இப்போது தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வுக்கு தனி ஈழமே சாத்தியம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு வந்துள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர், முன்னாள் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அன்று மகிந்த ராஜபக்ஸவின் முன்னிலையில்தானே பதவி ஏற்பைச் செய்தார். அதே மாகாணசபை உறுப்பினரான சிவாஜிலிங்கம் முள்ளிவாய்க்காலில் பதவிப் பிரமாணம் செய்திருந்தார். வரலாற்றில் இப்படிப் பல காட்சிகள் உண்டு.

**கேள்வி: ஆனால், இனஒடுக்குமுறையைத் தீவிரப்படுத்தி, இனவாதப்போரை முன்னெடுத்து, இன அழிப்புச் செய்த அரசாங்கத்தோடு நீங்கள் இணைந்திருந்ததாகத்தானே வெளியுலகம் உங்களை மதிப்பிட்டது. என்னதான் நீங்கள் நியாயங்களைச் சொன்னாலும் அந்தக் காலகட்டத்தின் ஆட்சிக்கு நீங்கள் முட்டுக் கொடுத்தீர்கள் என்பதுதானே உண்மை?**

பதில் : அரசியலில் பல விதமான விமர்சனங்கள் இருக்கும். அப்படிப் பல விதமான நிலைப்பாடுகளும் இருக்கும். 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி கூட்டணி அமைத்த ஆட்சியை 'நல்லாட்சி அரசாங்கம்' (Yahapalana Government) என்று சொன்னார்கள். அது நல்லாட்சி அரசாங்கமாகச் செயற்பட்டதா? அந்த ஆட்சிக்கு எதிர்க்கட்சியாக இருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவை எதிர்க்கட்சி என்ற நிலையைக் கடந்தும் வழங்கியிருந்தது. 'தமிழ் மக்களுடைய நலனுக்காகவே அந்த ஆதரவை வழங்குகிறோம்' என்று அப்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சொன்னது. அப்படி வழங்கப்பட்ட ஆதரவினால் தமிழர்களுக்குக் கிடைத்த நன்மைகள் என்ன? 'அது அரசாங்கத்தைக் காப்பாற்றும் நடவடிக்கை - அது ஒரு அரசியல் தவறு' என்று நான் சொன்னால், அதை உங்களால் மறுக்க முடியுமா? இப்பொழுது எந்த அடிப்படையும் இல்லாமல், எந்த வகையான முன்னேற்றமும் இல்லாமல் NPP யை பலர் ஆதரிக்கிறார்கள். எதிர்காலத்தில் இந்த ஆதரவை எப்படி மதிப்பிடுவது?

1990 களின் பிற்பகுதியில் அன்றைய சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் செம்மணியில் பாடசாலை மாணவி கிரிசாந்தியும் அவருடைய தாய், சகோதரன் ஆகியோரும் கொல்லப்பட்டதை நாடாளுமன்றத்தில் விவாதித்ததுடன், அந்த விடயத்தை சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் அமைப்புகள் என வெளியுலகத்துக்கு கொண்டு சென்றவன் நான். அதைப்பற்றிய விவரங்கள் நாடாளுமன்ற ஹன்ஸார்ட்டிலும் உண்டு. என்னுடைய நாடாளுமன்ற உரைகளின் தொகுப்புகளில் ஒன்றான 'வாழ்வை மீட்கும் குரல்' நூலிலும் உண்டு.

ஆட்சியாளர்களுடன் இணைந்து செயற்படுவது, ஆட்சித்தரப்புக்கு ஆதரவளிப்பது என்பதெல்லாம் யாருடைய நலனுக்கானவை? அதனால் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன? ஆட்சியாளர்களைக் கொண்டு பாதிப்புக்குள்ளாகிய மக்களுக்கு என்னவெல்லாம் செய்ய முடியும்? எதையெல்லாம் செய்திருக்கிறோம் என்றே நாம் பார்க்க வேண்டும். அப்போது நான் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளில் அரசாங்கத்தைக் கடுமையான முறையில் விமர்சித்திருக்கிறேன் கண்டித்திருக்கிறேன். முக்கியமாக காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், மீள்குடியேற்றம், படைவிலக்கல், சிங்கள பௌத்த ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு என அரசியல் மதிப்பீடுகளும் விமர்சனங்களும் விளைவுகளின் அடிப்படையில் அமைவதே சரி.

**கேள்வி: இப்பொழுது நீங்கள் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியில் (DTNA) இணைந்து செயற்படுகிறீர்கள். DTNA யின் அரசியல் நிலைப்பாடு, செயற்பாடுகள், எதிர்கால நடவடிக்கைகள் எப்படியானவை?**

பதில் : நான் முன்பே சொல்லியிருப்பதைப்போல, அரசியற் கூட்டுகள் காலத்தின் விளைவாகும். DTNA யின் உருவாக்கம் இந்தக் காலத்தினுடையது. DTNA யில் உள்ள கட்சிகள் போராட்ட வாழ்வையும் அனுபவத்தையும் கொண்டவை - செயற்பாட்டு அரசியலை அனுபவமாகக் கொண்டவை. மிதவாதத் தலைமைகள் பெரும்பாலும் கற்பனாவாத அரசியலை அகத்திலும் புறத்திலும் கொண்டிருப்பவை. DTNA யதார்த்தமாக விடயங்களைச் சிந்திக்கிறது. அந்த அடிப்படையில்தான் அது மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. முதலில் மாகாணசபைத் தேர்தலை நடத்தி, மக்களிடம் அதிகாரத்தைக் கொடுங்கள் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம். அடுத்ததாக அரசியல் தீர்வை முன்வையுங்கள். தேர்தலை நடத்தி ஜனநாயக உரிமைகளைப் பேணுங்கள் என்று யதார்த்தத்தைப் பேசுகிறோம். உள்ளூராட்சி மன்றங்களிலும் DTNA யின் உறுப்பினர்களுடைய செயற்பாடுகளும் வலியுறுத்துதல்களும் யதார்த்தமானவற்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

தமிழ் மக்களுடைய அரசியலில் DTNA ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம். எமது மக்கள் முன்பு மூன்று கட்சிகளின் கூட்டான தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்தனர். பிறகு, விடுதலைப் புலிகள், ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர். எல்.எவ் என நான்கு விடுதலை இயக்கங்களின் கூட்டான ஈழதேசிய விடுதலை முன்னணி (ENLF) ஐ வரவேற்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# போரை நடத்திய, தமிழ் மக்களைப் படுகொலைக்குள்ளாக்கிய ராஜபக்சவினருடன் இணைந்து செயற்பட்டது ஏன்?

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எனப் பல ஒற்றுமைகளையும் அணிகளையும் கூட்டுகளையும் கண்டு வந்த அனுபவத்தைக் கொண்டவர்கள். இந்தக் கூட்டுகளால் அந்தக் காலத்தில் உருவாகிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் பொய்த்துப்போனதே வரலாற்றுத் துயராகும். இதைப் புரிந்து கொண்டு DTNA செயற்பட வேண்டும் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பும் வலியுறுத்துகையும்.

முதலில் நாம் எங்கள் மண்ணிலிருந்து மக்கள் வெளியேறும் சூழலை மாற்ற வேண்டும். அதற்கு மக்கள் வாழும் பிரதேசங்களை வளமாக்குவதும் தொழில்துறைகளை மேம்படுத்துவதும் சரியான நிர்வாக நடைமுறைகளை உருவாக்குவதும் அவசியமாகும். இந்த மண்ணில் நாம் வாழ முடியும் என்ற எண்ணத்தை - நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அதற்கான ஒரு முன்னாயத்த நிலையாக மாகாணசபை நிர்வாகத்தைப் பொறுப்பேற்று, அதைச் சிறப்பான முறையில் நடத்த வேண்டும் என்று DTNA விரும்புகிறது. நிர்வாகத்திறனும் மக்கள் மீதான கரிசனையும் உள்ள ஆளுமைகளை முன்னிறுத்துவதன் மூலம் இதைச் சாத்தியப்படுத்தலாம். புலம்பெயர் மக்களின் ஆதரவையும் பல விதமான பங்களிப்புகளையும் நாம் பெற முடியும். அரசியற் தீர்வுக்கு ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியம். DTNA அனைத்துத் தமிழ்பேசும் தரப்புகளோடும் நட்புறவைப் பேணவே விரும்புகிறது. அந்த அடிப்படையில்தான் நாம் தமிழ்த்தேசிய விடுதலை முன்னணி, தமிழரசுக் கட்சி போன்றவற்றோடு தொடர் சந்திப்புகளையும் பேச்சுகளையும் நடத்தி வருகிறோம். வெளியுலகத்தோடும் எமது மக்களின் தேவைகளைப் பற்றியும் அரசியற் தீர்வைப் பற்றியும் உரையாடிக் கொண்டிருக்கிறோம். மக்களிடத்திலும் பரவலாக வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**கேள்வி: DTNA மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு கோரிப் பல கூட்டங்களை மாவட்டங்களில் நடத்தி வருகிறது. மாகாணசபையைப் பயனற்றது, அதிகாரமற்ற ஒன்று என்று கூறும் நிலைப்பாட்டில்தானே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடக்கம் புலம்பெயர் நாடுகளில் உள்ள பல்வேறு தமிழர் அமைப்புகளும் உள்ளன. 1987 இல் விடுதலைப் புலிகளாலும் தமிழ் மக்களாலும் நிராகரிக்கப்பட்ட ஒன்றை மீளவும் DTNA வலியுறுத்துவது எதற்காக?**

பதில்: மாகாணசபையை நிராகரித்த சக்திகளில் ஒன்று ஜே.வி.பி. ஆனால், ஜே.வி.பியும் மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றி, அதன் உறுப்பினர்களாகி இருந்தது. மாகாணசபையை ஒரு தீர்வாகத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால், அதற்கான தேர்தல் நடந்தால் தமது தரப்பிலிருந்து அதில் பங்குபற்றக் கூடிய வாய்ப்புண்டு என்று கஜேந்திரகுமார் தரப்பிலிருந்தே சொல்லப்பட்டுள்ளது. இது எதைக் காட்டுகிறது? யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதைத்தானே! ஆகவே இந்தக் கால மாற்றத்தையும் அதனுடைய தேவையையும் நாம் புரிந்து செயற்பட வேண்டும்.

ஏனைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் மாகாணசபை முறையில் பங்கேற்றிருக்கின்றன. முஸ்லிம், மலையக, சிங்களக் கட்சிகள் அனைத்தும் மாகாணசபைகளில் பங்குபற்றியுள்ளன. மாகாணசபை மூலமாக மலையகத்தில் எத்தகைய மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டன என்று அண்மையில் கிளிநொச்சியில் நடந்த மாகாணசபைகளைப் பற்றிய உரையாடல் நிகழ்வொன்றில் சமூகச் செயற்பாட்டாளரும் மலையக சமூக வளர்ச்சியுடன் தன் வாழ்நாளை அர்ப்பணித்து உழைத்து வருபவருமான பெரியசாமி முத்துலிங்கம் விளக்கினார். அன்றைய சூழல் வேறு. இன்றைய நிலை வேறு. அப்போது மாகாணசபையை ஏற்று, சீராகச் செயற்படுத்தியிருந்தால் இன்றைய நிலைவேறாக - வளர்ச்சியைப் பெற்றதாக இருந்திருக்கும்.

விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்ட மாகாணசபை என்பதால் அதை அப்படியே நிராகரிப்பதற்கு தமிழ்த்தரப்பில் சிலர் உள்ளனர். ஆனால், வேடிக்கை என்ன தெரியுமா? புலிகளால் நிராகரிக்கப்பட்ட மாகாணசபையை சிங்கள அரசும் அங்கீகரிப்பதற்குப் பின்னடிக்கிறது. உண்மையில் விடுதலைப்புலிகள் நிராகரித்ததை அரசாங்கம் ஏற்றிருக்க வேண்டும் அல்லவா. இங்கே புலிகள் வேண்டாம் என்றதை அரசாங்கமும் புறக்கணிக்க முற்படுகிறது. ஆனால், இதுவரையான ஒரேயொரு அரசியல் பெறுமானம் என்றால், அது மாகாணசபைதான். அதில் போதாமைகள் உண்டு. ஆனால், அதையும் நாம் கைவிட்டால் அடுத்தது என்ன? மாற்று என்ன? இங்கே நீங்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கே பின்னிற்கின்ற சிங்களத் தரப்பு தமிழ்த் தரப்பினர் எதிர்பார்க்கின்ற உச்சமான தீர்வைத் தருவார்களா? ஆகவேதான் நாம் சாத்தியப்படக் கூடிய முதற்கட்டப் பணிகளைப் பற்றிச் சிந்திக்கிறோம். ஆம் DTNA நடைமுறைகளைப் பற்றியே அதிகமாகச் சிந்திக்கிறது.

கேள்வி: DTNAயில் முன்னாள் விடுதலை இயக்கங்களே உள்ளன. அல்லது ஆயுதப்போராட்டத்தின் வழியாக வந்த அரசியல் தலைவர்களே உள்ளனர். முன்பு வெவ்வேறு நிலைப்பாட்டோடும் அடையாளத்தோடும் இயங்கியவர்கள், சிலவேளை எதிர் எதிர்த் தரப்பினராகவே செயற்பட்டதும் உண்டு. அப்படி இயங்கியவர்கள் ஒரு பொதுக் கூட்டில் இணையும்போது ஏற்படுகின்ற உணர்வு என்ன? இந்த இணைவின் பயன் என்ன?

**பதில் : ஆம், ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கூட்டு என்றே DTNA இன்றுள்ளது. அப்படி நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால். அப்படித்தான் அமைந்துள்ளது. எங்களுக்குள் வேறுபாடுகள் இருந்தாலும் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்விலும் வாழ்க்கை மேம்பாடுகளிலும் உரிமைக் கோரிக்கையிலும் நாம் அனைவரும் ஒருமித்தவர்களாகவும் புரிந்துணர்வுள்ளோராகவுமே இருக்கிறோம். காலம் தந்த அனுபவத்தையும் காலம் தந்திருக்கும் வாய்ப்பையும் இணைத்துச் செயற்படுகிறோம்.**

முன்பு எங்களுக்குத் தலைமை ஏற்றவர்கள் அரசியலை வழிநடத்தினார்கள். அவர்களே கூட்டுகளிலும் பங்குபற்றினார்கள். அது வேறு ஒரு சூழலாகவும் இருந்தது. பல வகையிலும் அந்தக் காலம் கருகிப் போனது என்றுதான் சொல்வேன். அந்தத் துக்கம் எல்லோருடைய மனதிலும் இருந்தது இன்னும் இருக்கிறது. அந்தத் துக்கத்தோடு மிகக் கடினமான காலத்தைக் கடந்து வந்த நாம், இப்போது உருவாக்கியிருக்கும் DTNA ஐ வலுவான சக்தியாக மாற்ற வேண்டும். அதற்கான உழைப்பையும் அர்ப்பணிப்பையும் செலுத்த வேண்டும். மக்கள் மிகவும் களைத்துப்போய் விட்டனர். அவர்களை மேலும் களைப்படைய வைக்க முடியாது - கூடாது. ஆகவே, DTNA யில் உள்ள அனைத்துச் சக்திகளும் ஒருங்கிணைந்து நியாயமான மாற்றத்தையும் புதிய - சரியான அரசியலையும் முன்னெடுக்க வேண்டும். அன்று முழுமையடையாமல் போன சாத்தியங்களை இப்போது சாத்தியமாக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

கூடிச் செயற்படும்போது கிடைக்கின்ற நம்பிக்கையும் மகிழ்ச்சியும் உண்மையில் ஒரு புதிய அனுபவம் தான். நாம் ஆயிரம் யானையின் பலத்தை உணர்கிறோம். விடுதலைப்புலிகள் கூட பின்னாளில் ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்திருந்தனர். அதனால்தான் அவர்கள் 1980 களின் பிற்பகுதியில் நிராகரித்த TELO, EPRLF, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போன்றவற்றை எல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக்கி, அவற்றோடு இணைந்து வேலை செய்தனர். காலத்தின் கட்டளையை யார்தான் மீற முடியும்?

**கேள்வி: தமிழரசுக் கட்சிக்கும் DTNA க்கும் இடையில் என்ன வேறுபாடு? அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் (TNA) ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணிக்கும் (DTNA ) இடையில் உள்ள வித்தியாசம் என்ன? இதுவும் குமுதத்தில் வருவதைப்போன்று ஆறு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள் மாதிரித்தானா?**

பதில் : TNA, தமிழரசுக் கட்சியினால் கட்டுப்படுத்தப்பட்டது. DTNA அப்படியல்ல. அது இணைத்தலைவர்களைக் கொண்ட சமாந்தரமான அமைப்பு. அரசியல் ரீதியாகவும் சாத்தியமான விடயங்களுக்கே முன்னுரிமை அளிக்கிறது. மக்களுக்கான பணிகளை முதன்மைப்படுத்துகிறது. ஏனைய தமிழ்பேசும் தரப்புகளோடு திறந்த உறவைப் பேணுவதற்கு முற்படுகிறது. வெளிப்படையான அரசியல் தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கிறது. கூட்டுச் செயற்பாட்டில் உறுதியாக உள்ளது. இதற்கு மேல் நான் பேச விரும்பவில்லை.

**கேள்வி: அரசியற் தீர்வு, அரசியலமைப்பு மாற்றம் போன்றவற்றில் DTNA யின் நிலைப்பாடு என்ன? வழமையைப்போல அரச எதிர்ப்புத்தானா?**

பதில்: அரசியற் தீர்வுக்கான DTNA யின் பரிந்துரைகள் உண்டு. தமிழ்பேசும் மக்களின் நலனை விட்டுக் கொடுக்காத தீர்வு என்பதை அழுத்தமாகவே சொல்லி வருகிறோம். அரசியலமைப்புத் திருத்தம் பற்றி உரிய நேரத்தில் DTNA கூடி முடிவெடுக்கும். அரச எதிர்ப்பு - அரச ஆதரவு என்பதெல்லாம் அரசு செயற்படும் விதத்தைப் பொறுத்தே அமையும். அரசியல் தீர்வு, அரசியல் அமைப்பு மாற்றம், பயங்கரவாத தடைச்சட்டம் போன்றவற்றில் முன்னேற்றத்தை எடுக்காமல் NPP அரசாங்கம் தந்திரமாகச் செயற்படுகிறது. பதிலாக பௌத்த விரிவாக்கம், நில அபகரிப்பு, இனப்பாரபட்சம் போன்றவற்றைச் செய்து சிங்கள மக்களை மகிழ்ச்சிப்படுத்துகிறது. இந்த நிலையில் அரச ஆதரவை எதிர்பார்க்க முடியாது. அரசாங்கத்தின் தந்திரங்களையெல்லாம் நாம் எதிர்த்தே ஆகவேண்டும். நாங்கள் நியாயமான அரசியல் தீர்வை எதிர்பார்க்கிறோம். அதற்கு முன்பு மாகாணசபைகளை இயக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அழுத்துகிறோம். இந்தியா உட்பட சர்வதேச சமூகத்திடமும் எமக்கான ஆதரவையும் நியாயத்தையும் கோருகிறோம். எல்லாமே எமக்கு அவசியமானவை.

**கேள்வி: வடக்கு- கிழக்கில் NPP தீவிரமாக தன்னை விஸ்தரித்துள்ளதே. இந்த நிலையில் தமிழ்க்கட்சிகளின் நிலை?**

பதில் : JVP க்கு 1970 களிலேயே வடக்கில் ஒரு சிறிய அளவிலான ஆதரவு இருந்தது. பிறகு 40 ஆண்டுகளாக ஒரு பெரிய வெற்றிடம். இப்பொழுது கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தன்னை விஸ்தரிப்பதற்கு JVP முயற்சிக்கிறது. இங்கே NPP இல்லை. JVP தான் உள்ளது. JVP யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாதான் சந்திப்புகளைச் செய்கிறார். தீர்மானங்களை எடுக்கிறார். அறிவிப்புகளை விடுகிறார். NPP யின் பொதுச்செயலாளர் நிஹால் அபேசிங்கவை யாராவது அறிவீர்களா? தேர்தல் காலத்தைத் தவிர, வேறு நாட்களில் அவர் வருகிறாரா? ஆட்சியில் இருப்பதால், அந்த அனுகூலங்களை - அதிகார வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தன்னை விரிவாக்கம் செய்வதற்கு JVP முயற்சிக்கிறது. வரலாறு இப்படி எத்தனை காட்சிகளைக் கண்டுள்ளது. ராஜபக்ஸவினர் ஆடாத ஆட்டமா?

இதேவேளை தமிழ்க்கட்சிகள் தம்மைப் புதிதாக - காலத்துக்கு ஏற்றதாகச் செயற்பட வேண்டும் என்று காலமும் சூழலும் வலியுறுத்துகிறது. அதைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது காலக் கடமையாகும். நாம் காலத்தை உணர்ந்தும், முன் உணர்ந்தும் செயற்பட விளைகிறோம்.

**கேள்வி: உங்களுடைய சமத்துவக் கட்சியின் அரசியல் எல்லை கிளிநொச்சிக்குள் மட்டுப்பட்டுள்ளதே. கிளிநொச்சிக்கு அப்பாலும் புலம்பெயர் நாடுகளிலும் அதனுடைய செயற்பாடுகள்?**

பதில் : கிளிநொச்சிக்குள் எம்மை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. எமது தலைமைச் செயலகம் கிளிநொச்சியில் உள்ளதால் உங்களுக்கு அப்படித் தோன்றலாம். ஆனால், எமது செயற்பாட்டுப்பரப்பு வடமாகாணம் முழுவதிலும் உண்டு. கிழக்கில் விரிவாக்க முயற்சிகளில் இருக்கிறோம். சமத்துவக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேச சபை, நகர சபை உறுப்பினர்கள் உள்ளனர். புலம்பெயர் நாடுகளில் பலர் எங்களோடு இணைந்து வேலை செய்கிறார்கள் பங்களிப்புச் செய்கிறார்கள். மனித குலத்தில் எல்லோரும் ஏற்கக் கூடிய - யாரும் நிராகரிக்க முடியாத நடைமுறைகளையும் கொள்கையையும் கொண்டுள்ளது சமத்துவக் கட்சி.



# ஆப்கான் போர்க்குற்றமும் அவுஸ்திரேலியாவும்:

# ஒரு தேசம் தனது 'போர் நாயகனை' கூண்டில் நிறுத்திய கதை!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஒரு நாடு தனது இராணுவ வீரர்களை எப்போதுமே கௌரவத்துடனும் பெருமிதத்துடனும் தான் பார்க்கும். ஆனால், அந்த வீரர்களே போர்க் குற்றங்களில் ஈடுபட்டால்? பெரும்பாலான நாடுகள் அதனை மூடிமறைக்க முயலும் வேளையில், அவுஸ்திரேலியா எடுத்துள்ள அதிரடி நடவடிக்கை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

### சரிந்த பிம்பம்: பென் ராபர்ட்ஸ்-மித் கைது

அவுஸ்திரேலியாவின் மிக உயரிய இராணுவ விருதான 'விக்டோரியா குரோஸ்' பதக்கம் பெற்றவர் பென் ராபர்ட்ஸ்-மித். ஒரு காலத்தில் அந்த நாட்டின் 'போர் நாயகனாக'க் கொண்டாடப்பட்டவர். ஆனால், கடந்த வாரம் சிட்னி விமான நிலையத்தில் அவர் கைது செய்யப்பட்ட செய்தி, சர்வதேச இராணுவ வட்டாரத்தில் பேரிடியாக இறங்கியது.

ஆப்கானிஸ்தானில் பணியாற்றிய போது, ஆயுதம் ஏந்தாத கைதிகளைக் கொலை செய்ததாக அவர் மீது சுமத்தப்பட்ட ஐந்து குற்றச்சாட்டுகள், பல ஆண்டுகளாக ஊடகங்களால் புலனாய்வு செய்யப்பட்டன. தன் மீதான குற்றச்சாட்டுகளை அவர் மறுத்து வந்தாலும், நீதிமன்றம் அதனை உறுதிப்படுத்தியதை அடுத்து அவர் கைதாகியுள்ளார். இது அவுஸ்திரேலிய இராணுவ வரலாற்றில் அழியாத ஒரு கரும்புள்ளியாக மாறியுள்ளது.

### ஆப்கானில் அரங்கேறிய 'ப்ளடிங்' கலாசாரம்

..செப்ரெம்பர் இரட்டைக் கோபுரத் தாக்குதலைத் தொடர்ந்து, தலிபான்களுக்கு எதிரான அமெரிக்காவின் யுத்தத்தில் அவுஸ்திரேலியாவும் கைகோர்த்தது. 2005 முதல் 2016 வரை ஆப்கானில் நிலைகொண்டிருந்த அவுஸ்திரேலிய சிறப்புப் படையினர் இழைத்த கொடூரங்களை 'பிரெரெட்டன் அறிக்கை' (Brereton Report) வெளிச்சம் போட்டுக் காட்டியது.

- சுமார் 39 ஆப்கானியக் குடிமக்கள் மற்றும் கைதிகள் சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டதற்கான நம்பகமான ஆதாரங்கள் கிடைத்தன.
- இளம் வீரர்களைக் கொலை செய்யத் தூண்டும் ஒரு வக்கிரமான கலாசாரம் அங்கு நிலவியது. அதாவது, ஒரு வீரன் தனது முதல் கொலையைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே கைதிகள் கொல்லப்பட்டனர்.
- இந்தக் குற்றங்களை மறைப்பதற்காகக் கொல்லப்பட்டவர்களின் உடல்களுக்கு அருகில் ஆயுதங்களை வைக்கும் 'மூடிமறைக்கும்' உத்திகளும் கையாளப்பட்டன.




### அமெரிக்காவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான வேறுபாடு

இங்குதான் அவுஸ்திரேலியா தனித்து நிற்கிறது. வியட்நாம் போர் முதல் ஈராக் போர் வரை அமெரிக்கப் படையினர் மீது எத்தனையோ போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. மைலாய் படுகொலை, அபு கிரைப் சிறை சித்திரவதை, காந்தகார் படுகொலை எனப் பட்டியல் நீண்டாலும், அமெரிக்கா எப்போதும் தனது உயர்மட்டத் தலைவர்களையோ அல்லது முக்கியமான வீரர்களையோ சர்வதேச நீதிமன்றங்களிடம் ஒப்படைக்க முன்வரவில்லை.

ஆனால், அவுஸ்திரேலியாவோ தனது கூட்டாளி நாடுகளைப் போலன்றி, "சட்டம் அனைவருக்கும் சமம்" என்பதை நிரூபித்துள்ளது. தனது நாட்டின் மிக உயரிய விருது பெற்ற வீரராக இருந்தாலும், அவர் குற்றவாளி எனத் தெரிந்ததும் நீதியின் முன் நிறுத்தியுள்ளது. அவுஸ்திரேலியப் பாதுகாப்புப் படையின் தலைவர் ஜெனரல் அங்கஸ் காம்ப்பெல், ஆப்கானிஸ்தானிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியமை ஒரு நாகரிகமான இராஜதந்திரத்தின் அடையாளம்.

### வெட்கக்கேடான பதிவுகள்

"யுத்தத்தின் உச்சகட்டத்தில், குழப்பமான சூழலில் நடந்த தவறுகள் இவை அல்ல. போரிடும் விதிகளை நன்கு அறிந்த



வீரர்களே சட்டத்தைத் தங்களது கையில் எடுத்துள்ளனர்" என்று இராணுவத் தலைமையே ஒப்புக்கொண்டது. 2020-ஆம் ஆண்டு பல வீரர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர் சில அதிகாரிகளின் பதக்கங்கள் பறிக்கப்பட்டன.

### முறை தவறாத நீதி

போர் என்பது வெறும் வெற்றிகளைப் பெறுவது மட்டுமல்ல. அது மனிதாபிமானத்தின் விழுமியங்களைப் பாதுகாப்பதும் கூட. அவுஸ்திரேலியா தனது சொந்தப் படையினருக்கு எதிராக எடுத்துள்ள இந்தத் தனித்துவமான விசாரணை முறை, உலக நாடுகளுக்கு ஒரு பாடம். அநீதி இழைக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற அவுஸ்திரேலியாவின் இந்தத் துணிச்சலான அணுகுமுறை, அந்த நாட்டின் நீதித்துறை மீதான நம்பகத்தன்மையை உலக அரங்கில் உயர்த்தியுள்ளது.


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices & Things Where quality meets community
Location:
79 McIntyre Rd, Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com

# எல்லைப் பாதுகாப்பில் புதிய கவசம்!




ஆஸ்திரேலிய அரசியல் களத்தில், குடியேற்றக் கொள்கை என்பது வெறும் நிர்வாக விவகாரம் மட்டுமல்ல அது வரும் தேர்தலின் தலையெழுத்தைத் தீர்மானிக்கக்கூடிய ஒரு துருப்புச் சீட்டாகும்.

எல்லைப் பாதுகாப்பில் நிலவும் ஓட்டைகள் மற்றும் குடியேற்ற நடைமுறைகளின் நம்பகத்தன்மை குறித்த விவாதங்கள் பொதுமக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ள நிலையில், எதிர்க்கட்சிக் கூட்டணி (Coalition) ஒரு வியூக ரீதியான நகர்வை மேற்கொண்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அங்கஸ் டெய்லர் (Angus Taylor) அறிவித்துள்ள புதிய “தீவிர பரிசோதனைக்கான சிறப்புப் பணிக்குழு“ (Special Screening Taskforce) குறித்த திட்டம், அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆஸ்திரேலியாவின் எல்லை ஒருமைப்பாட்டை மீளக்கட்டமைக்கப் போவதாகக் கூறும் இந்தத் திட்டம், நாட்டின் எதிர்காலக் குடியேற்ற வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமையக்கூடும்.

### விண்ணப்பங்கள் தணிக்கை செய்யும் உயர்மட்டக் குழு

எதிர்க்கட்சிக் கூட்டணியின் இந்தத் திட்டத்தின் அடிப்படை அத்திபாரம், “விண்ணப்பங்கள் தணிக்கை செய்யும் உயர்மட்டச் சிறப்புப் பணிக்குழு“ அமைப்பதாகும். தற்போது நடைமுறையில் உள்ள உள்துறை அமைச்சகத்தின் வழக்கமான பரிசோதனை முறைகளிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது.

தற்போதைய அமைப்பு ஆவணங்களைச் சரிபார்ப்பதோடு நின்றுவிடும் நிலையில், இந்தப் புதிய பணிக்குழு, விண்ணப்பதாரர்களின் பின்னணி மற்றும் அவர்கள் தேசத்தின் பாதுகாப்பிற்கு அல்லது சமூகக் கட்டமைப்பிற்கு ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான தாக்கங்களை நுண்ணோக்கி மூலம் ஆராய்வது போலத் துல்லியமாகத் தணிக்கை செய்யும்.

இந்தத் திட்டம் ஒரு “நேரடித் தலையீடு“ முறையாகப் பார்க்கப்படுகிறது. அதாவது, நிலையான துறைசார் அதிகாரத்துவ நடைமுறைகளுக்கு அப்பால், ஒரு பிரத்தியேக அதிகார அமைப்பின் மூலம் விண்ணப்பங்களை வடிகட்டுவதே இதன் நோக்கம்.

நவீன தொழில்நுட்பம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகளைப் பயன்படுத்தி, தகுதியற்றவர்களை நுழைவு நிலையிலேயே கண்டறியும் ஒரு கவசமாக இது செயற்படும். இது நாட்டின் பாதுகாப்புச் சூழலை வலுப்படுத்துவதற்கான ஒரு ”தீர்க்கமான நகர்வு” என்று அரசியல் ஆய்வாளர்களால் கருதப்படுகிறது.

“எமது குடியேற்ற அமைப்பின் நம்பகத்தன்மையை மீட்டெடுப்பதே இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கம். நாட்டின் சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பிற்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கும் நபர்களுக்கு மட்டுமே ஆஸ்திரேலியா முன்னுரிமை அளிப்பதை இந்தப் பணிக்குழு உறுதி செய்யும்.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் அங்கஸ் டெய்லர் குறிப்பிட்டுள்ளார்.

### குடியேற்ற எண்ணிக்கையை முறையாக நிர்வகித்தல்

இந்தத் திட்டம் குடியேற்ற எண்ணிக்கையைக் குறைப்பதற்கான ஒரு நேரடி மற்றும் மறைமுகக் கருவியாகச் செயற்படும். வெறுமனே எண்களின் அடிப்படையில் கட்டுப்பாடுகளை விதிக்காமல், “தரமான குடியேற்றம்“ (Quality Migration) என்ற தர்க்கத்தின் அடிப்படையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் உள்ள முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

கடுமையான வடிகட்டுதல்: ஸ்கிரீனிங் பணிக்குழுவின் தீவிரத் தணிக்கை காரணமாக, பாதுகாப்பு மற்றும் பின்னணி சோதனைகளில் தேர்ச்சி பெறாதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும், இது தானாகவே ஒட்டுமொத்த எண்ணிக்கையைக் குறைக்கும்.

வீட்டு வசதி மற்றும் உட்கட்டமைப்பு மீதான அழுத்தத்தைக் குறைத்தல்: முறையான வடிகட்டுதல் மூலம், நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு இணங்கக் கூடிய அளவில் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த கூட்டணி திட்டமிடுகிறது.

பொருளாதாரத் தேவைக்கு முன்னுரிமை: நாட்டின் உற்பத்தித் திறனுக்குப் பங்களிக்காத அல்லது தேவையற்ற பிரிவுகளில் வரும் விண்ணப்பங்களைத் தவிர்ப்பதன் மூலம் ஒரு சமநிலையான எண்ணிக்கையைப் பேணுதல்.

### பொருளாதாரம் மற்றும் குடியேற்றக் கொள்கையின் இணைப்பு

நிழல் நிதியமைச்சராக இருக்கும் அங்கஸ் டெய்லர் இந்தப் பணிக்குழுவை வழிநடத்துவது ஒரு குறிப்பிடத்தக்க மூலோபாய மாற்றமாகும்.

இது ஆஸ்திரேலியாவின் குடியேற்றப் பிரச்சினையை வெறும் “எல்லைப் பாதுகாப்பு“ சார்ந்த விஷயமாக மட்டும் பார்க்காமல், அதை ஒரு “பொருளாதார உற்பத்தித் திறன் மற்றும் வீட்டு வசதி“ (Economy-Migration Nexus) சார்ந்த விஷயமாகக் கூட்டணி மாற்றியமைத்துள்ளதைக் காட்டுகிறது.

இது வரும் தேர்தலில் அரசாங்கத்திற்கு எதிராகக் கூட்டணி வைக்கப்போகும் ஒரு வலுவான “பொருளாதார-பாதுகாப்பு” ஆயுதமாகும். இத்தகைய ஒரு நகர்வு, வாக்காளர்கள் மத்தியில் ஒரு புதிய நம்பிக்கையை விதைக்கக்கூடும்.


அங்கஸ் டெய்லரின் இந்தப் புதிய திட்டம், ஆஸ்திரேலியக் குடியேற்றக் கொள்கையில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுத முயல்கிறது. இது நாட்டின் பாதுகாப்பையும் பொருளாதார வளத்தையும் உறுதி செய்யும் ஒரு கவசமாக முன்னிறுத்தப்பட்டாலும், இதன் வெற்றி என்பது அந்தப் பணிக்குழு எந்தளவிற்குச் சுயாட்சியுடன் செயற்படும் என்பதிலேயே தங்கியுள்ளது.

இந்தத் தீவிரப் பரிசோதனை முறை, ஆஸ்திரேலியக் குடியேற்றக் கொள்கையின் புதிய முகமாக (The new face of migration policy) விளங்குமா அல்லது தேர்தலுக்காக முன்வைக்கப்படும் ஒரு கவர்ச்சிகரமான “அரசியல் கண்துடைப்பு“ (Political window dressing) நடவடிக்கையாக முடிந்துவிடுமா?

### அரசியல் எதிர்வினைகள்

இந்தத் திட்டம் தேவையற்ற அச்சத்தை மக்களிடையே விதைப்பதாகவும், ஏற்கனவே உள்ள பாதுகாப்பு நடைமுறைகளைற டெய்லர் குறைத்து மதிப்பிடுவதாகவும் ஆளுங்கட்சியான லேபர் விமர்சித்துள்ளது.

இது மனித உரிமைகளுக்கு எதிரானது என்றும், ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை மட்டும் இலக்கு வைப்பதாகவும் கிறீன்ஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.



# எதிர்ப்பக்கம்

### ஆசான் அடித்த சிக்ஸர்

கடந்த சில நாட்களாக எனக்குத் தெரிந்த எல்லோரிடமும் புலம்பி வருகிறேன். இந்த அளவுக்கு தமிழையும், தமிழ் இலக்கியத்தையும் கேவலப்படுத்த முடியாது .

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்.

நீங்கள் தகுதியானவரா அல்லது கொஞ்சமும் அருகதையற்றவரா என்பதை உங்கள் எச்சம் அதாவது நீங்கள் விட்டுச் சென்றவையே காட்டும். இங்கே 'வை.மு.' தமிழுக்கு என்ன செய்தார் என்பதை அவரது திரைப்படப் பாடல்களை மட்டும் வைத்து எடை போடாதீர்கள். அது தமிழைக் கீழ்மைப்படுத்தும் செயலாகும்.

திரும்பிய திசை எங்கும் அவரை நோக்கி கண்டனங்கள். என் சார்பில் நானும் ஞானபீட அமைப்பிற்கும் மின் அஞ்சல் செய்துவிட்டேன். இதெல்லாம் அவர்கள் பார்ப்பார்களா என்று தெரியாது. Be the change what you want to see in the world.

நான் எனது நண்பர் ஒருவரிடம் ஏன் அவருக்கு தகுதி இல்லை என்பது குறித்து அசோகமித்திரன் படைப்புகளை அவருக்கு அனுப்பி படிக்கச் சொன்னேன். எனது தவறு தான் அவருக்கு அமியின் "பிரயாணம்" கதையைப் பகிர்ந்தது. அவருக்கு ஒன்றும் புரியவில்லை. நான் கடந்த பத்து- இருபது வருடங்களில் பலமுறை படித்துமே ஒவ்வொரு முறையும் ஒவ்வொன்றைக் கண்டுபிடிக்கிறேன் அந்தக் கதையில். இரண்டு மணி நேரம் நாங்கள் பேசினோம். அந்தக் கதை பற்றியும், ஏன் அதற்கு பிரயாணம் என்று பெயர் வைத்திருக்கலாம் என்றும், அந்தக் கதை இன்னும் முடியவேயில்லை என்றும், இனிமேல் தான் தொடங்குகிறது என்றும் பலவாறு பேசினேன். அமி, கிரா மற்றும் சுரா குறித்தெல்லாம் தொடர்ந்து விவாதித்தேன். அவர் கடைசியாக கருவாச்சி காவியம் கிளாசிக் என்றார் எனக்கு கிட்டதட்ட பைத்தியம் பிடித்துவிடும் நிலை. நான் நன்றி , வணக்கம் என்று முடித்துவிட்டேன். இத்தனைக்கும் அவர் ஐரோப்பிய நகரில் ஆராய்ச்சி பயிலும் மாணவர். அவரே அப்படி என்றால் மற்றவரின் நிலை சொல்லத்தேவையில்லை. இவர்கள் போன்றவர்களுக்கு 'வைமு' கவிப்பேரரசு தான்.

இனிமேல் இந்த விருது வழங்குவது குறித்து அவர்கள் (ஞானபீட அமைப்பு) எந்த மாற்றமும் செய்யப் போவதில்லை.

நம் தகுதியை அவர்கள் என்ன முடிவு செய்வது?நாமே முடிவு செய்வோம் என்று ஆசான் முடிவு செய்துள்ளார் .

"இந்திய வரலாற்றின் மிகப்பெரிய இலக்கிய விருது. உலக இலக்கியத்திலும் இந்திய இலக்கியத்திலும் சாதனைப் படைப்புக்கான LIVING TAMIL AWARD FOR WORLD LITERATURE . ஆண்டுதோறும் வழங்கப்படும் இந்த விருது டெல்லியிலும் நியூயோர்க்கிலும் ஆண்டுதோறும் அறிவிக்கப்படும். விருதுத்தொகை இந்திய ரூபாயில் ஒரு கோடி. (ஏறத்தாழ ஒரு லட்சம் டொலர்)

இந்தச் செய்தி டெல்லியிலும், சென்னையிலும், நியூயோர்க்கிலும் முறையாக அறிவிக்கப்படும்."

நான் முன்பே கூறியபடி , ஆசானை யாராவது சீண்டினால் விளைவு இது தான் . அவர் சும்மாவே சிக்ஸரா அடிப்பார் . நீங்கள் சீண்டினால் , கேட்கவா வேண்டும் .இனிமேல் அவர் ஆட்டம் தான்.

### அப்பாவின் பிள்ளைக்கு சாகித்ய அகாடமி விருது

தமுஎச ( தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கம்) வின் முக்கியமான எழுத்தாளரும், இடதுசாரியுமான தமிழ்ச்செல்வனுக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டிருக்கிறது. டிசம்பர் மாதத்தில் அறிவிப்பு வந்த போதிலும் மத்திய அமைச்சரின் தலையீட்டால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

கடந்த சில நாட்களில் விரக்தியும், கோபமும் கலந்திருந்த தருணத்தில் ச.தமிழ்ச்செல்வனுக்கு கிடைத்த இந்த விருதால் மகிழ்ச்சி.

அவரது இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் என்னிடம் இருந்தன. வீடு மாறும்போது எங்கு போனது என்று தெரியவில்லை.

ஏற்கனவே நமக்கெல்லாம் தெரிந்த "பூ" திரைப்படத்தின் மூலக்கதையான "வெயிலோடு போய் " அவரின் அற்புத்மான கதை. அந்தக் கதையின் முடிவு அவ்வளவு அற்புதமாக இருக்கும். திரையில் அந்த அளவு நேர்த்தியாக வரவில்லை என்பது எனது தனிப்பட்ட கருத்து.

என் நினைவில் என்றும் நிற்கும் அவர் எழுதிய "அப்பாவின் பிள்ளை ". என்னளவில் தமிழில் எழுதப்பட்ட மிக முக்கியமான சிறுகதைகளில் ஒன்று.

மிகத் தாமதமாக கிடைத்த போதிலும் தகுதி வாய்ந்தவருக்கு கிடைத்திருக்கிறது.

மகிழ்ச்சி

### கயமைத்தனத்தின் மறுபெயர் CAF

கடந்த ஜனவரி மாதம் மொரக்காவில் நடைபெற்ற ஆபிரிக்க கோப்பை கால்பந்து போட்டியில் செனகல் கோப்பையை வென்றது நாம் அறிந்ததே.

இறுதிப்போட்டியில் செனகல் - மொராக்கோ மோதின. அந்தப் போட்டியின் இறுதி நிமிடத்தில் செனகல் அணி வீரர் El Hadji Malick Diouf மொராக்கோ அணியின் நட்சத்திர வீரரை (Brahim Diaz) தள்ளி விட்டதாக சந்தேகத்திற்கு இடமான பெனால்டி தீர்ப்பினை வழங்கினார். இதனை எதிர்த்து செனகல் வீரர்கள் வெளிநடப்பு செய்தனர். ஆட்டம் 20 நிமிடம் தடைப்பட்டது. பிறகு செனகலின் கேப்டன் sadio Mane தலையிட்டு சமரசம் செய்து, விளையாடினார். தர்மம் வெல்லும் என்பதைப் போல Diaz பெனால்டி வாய்ப்பினை வீணாக்கி விட்டார். முடிவில் செனகல் அணி ஒரு கோல் அடித்து 1-0 வித்தியாசத்தில் கோப்பையை வென்றது.

மொராக்கோ கால்பந்து சம்மேளனம் செனகல் ஆட்டத்தின் விதிகளை மீறியதாக CAFல் ( Confederation of African Football Associations) புகார் செய்தது. இதனை விசாரித்த CAF செனகல் ஆட்டத்தின் விதிகளை மீறியதாகவும் (அதாவது ஆட்டத்தின் இடையில் வெளியேறியது ) 3-0 என்ற கோல் கணக்கில் மொராக்கோ வென்றதாகவும் அறிவித்துள்ளது.

கால்பந்து வரலாற்றிலேயே கோப்பை வென்ற அணியிடம் இருந்து கோப்பையை பிடுங்குவது இதுவே முதல்முறை.

இந்த கயமைத்தனம் செய்த CAF சம்மேளனத்தை இணைய உலகில் இன்று வறுத்தெடுத்து வருகின்றனர்.

செனகல் வீரர்கள் 'நீங்கள் முடிந்தால் வந்து எங்களது கோப்பையை எடுத்து செல்லுங்கள் 'என்று கூறியுள்ளனர்.

மொராக்கோ கால்பந்து அமைப்பை வன்மையாக கண்டிக்க வேண்டும். ஒரு விளையாட்டு போட்டி முடிந்து விட்டதென்றால் அவ்வளவு தான் . முடிவினை மாற்றி மற்றவர் வென்றதாக அறிவிப்பது அநீதி.

செனகல் மட்டுமே ஆபிரிக்க சாம்பியன். அவர்களிடம் இருந்து அநியாயமாக தட்டிப் பறிக்க நினைப்பது கடைந்தெடுத்த அயோக்கியதனம். வேறென்ன சொல்ல?

### எல்லாக் காலி அறைகளிலும்

*ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்*
*மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா!*
*நமக்கும் அதுவழியே! நாம்போம் அளவும்*
*எமக்கென்? என்(று) இட்டு, உண்டு, இரும்*

கடந்த வருடத்திற்கான சிறந்த ஆவணப்படத்திற்கான ஒஸ்கர் விருதினை "எல்லாக் காலி அறைகளிலும் " (All the Empty Rooms ) என்ற ஆவணப் படம் வென்றது. இந்த ஆவணப் படம் அமெரிக்காவில் பள்ளிக்கூடங்களில் நடந்த கொடூரத் துப்பாக்கிச்சூடுகளில் இறந்த நான்கு குழந்தைகளின் காலி அறைகளை படம் பிடித்திருக்கிறது.

அமெரிக்காவின் துப்பாக்கி கலாசாரம் எந்த அளவிற்கு சீரழிந்து போயிருக்கிறது என்பதை இந்த ஆவணப்படம் சொல்லாமல் சொல்கிறது. இறந்து போன நான்கு குழந்தைகளின் காலி அறைகளுக்கு செல்கிறார்கள். அந்தக் காலி அறைகளில் பெற்றோர் அவர்களின் நினைவுகளை தேக்கி வைத்திருக்கின்றனர். ஒரு குழந்தையின் அறையினுள் அவரது தாயார் அவனது அழுக்கு துணிகளை துவைக்காமல் வைத்திருக்கிறார். ஏனென்றால் அவனது வாசம் அப்பொழுது இங்கு இருக்கும் என்கிறார் . கண்ணில் நீர் வராமல் நீங்கள் பார்க்கவே முடியாது.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

இன்னொரு இறந்துபோன குழந்தையின் சகோதரர்கள் "என் தங்கை தான் சிறந்தவள். நாங்கள் இழந்து வாடுகிறோம்" என்று சொல்கின்றனர். மற்றொரு குழந்தையின் தந்தை "எனக்கு அவளின் நினைப்பு வரும்போதெல்லாம் அவளது படுக்கையின் மெத்தையில் உட்கார்ந்து கொண்டு அழுவேன் " என்கிறார்.

வெறும் 33 நிமிடங்களில் ஒரு காத்திரமான படைப்பை கொடுக்க முடியுமா. கொடுத்திருக்கிறார்கள். அமெரிக்காவின் விஷேசம் என்னவெனில் அங்கே தான் உலகத்தின் மாபெரும் கொடுமைகள் நடக்கும் .ஆனால் அதே வேளையில் அதனைப் பற்றிய சுதந்திரமான ,நடுநிலையான ஆவணங்களும் அவர்களால் படைக்க முடியும்.சுதந்திரத்தின் நிலம் அது.

41 பேர்களை பலி கொடுத்த கரூர் சம்பவத்தினை பற்றிய ஒரு நடுநிலையான ஆவணப் படம் இங்கே எடுக்க முடியுமா என்ற கேள்வியில் தான் நமது நேர்மையை அளவீடு செய்து கொள்ள முடியும்.

### அண்ணாமலைக்கு அரோகரா

கடந்த 2021 தமிழக சட்டமன்ற தேர்தல் நடைபெற்றபொழுது , பாரதிய ஜனதாக் கட்சியின் அடுத்த முதல்வர் இவர்தான் என்று எல்லோராலும் சொல்லப்பட்ட படித்த பண்பாளர் அண்ணாமலை இப்பொழுது அவர் வளர்த்த கட்சியிலிருந்தே ஓரங்கட்டப்பட்டிருக்கிறார்.

ஒரு காலத்தில் கோவை ,கன்னியாகுமரி தவிர பிற எந்தப் பகுதிகளிலும் வாக்கு வாங்கி இல்லாத பாஜக கட்சியானது கடந்த 6 ஆண்டுகளில் தமிழகத்தில் மூலை முடுக்கெங்கும் வளர்ந்திருக்கிறதென்றால் அதற்கு காரணம் அண்ணாமலை மட்டுமே என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

அண்ணாமலை பாஜக கட்சியை ஒரு தனிப்பெரும் கட்சியாக வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் தனித்துப் போட்டியிட்டால் என்ன நடக்குமென்பதை 2024 நாடாளுமன்றத் தேர்தலில் காண முடிந்தது அல்லவா . அது மட்டுமின்றி அவர் எடப்பாடி பழனிசாமியை விமர்சனம் செய்ததால், கோபம் கொண்டிருந்த அதிமுக அணி எப்பொழுது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்திருந்தது. பாஜக மேலிடம் அதிமுகவுடன் கூட்டணி வைக்கவில்லையெனில் அது திமுகவின் வளர்ச்சிக்கு கொண்டு செல்லுமென்பதால், எடப்பாடியின் வேண்டுகோளுக்கிணங்க தமிழக பாஜக தலைவர் பதவியை அண்ணாமலையிடமிருந்து பிடுங்கி நயினார் நாகேந்திரனுக்கு கொடுத்தனர்.

எடப்பாடி மிகச் சாதுரியமாக கூட்டணி தொகுதிகள் பங்கீட்டில் பாஜகவிற்கு சாதகமில்லாத தொகுதிகளை அவர்களுக்கு ஒதுக்கி வெற்றிகண்டார் .அது மட்டுமின்றி அண்ணாமலை ஜெயிக்க வாய்ப்புள்ள தொகுதிகளை அதிமுக எடுத்துக்கொண்டது. பெருத்த இழுபறிக்கு பின்னர் பாஜக தனது வேட்ப்பாளர்களை அறிவித்திருக்கிறது. அனைவரும் எதிர்பார்த்தபடி அண்ணாமலை மற்றும் அவரது ஆதரவாளர்களுக்கு இந்த தேர்தலில் வாய்ப்பு கிடைக்கவில்லை.

அண்ணாமலையின் சாட்டையைப் பிடுங்கி அவருக்கு அடித்திருக்கின்றனர் எடப்பாடியும் ,நயினார் நாகேந்திரனும். மலை இப்பொழுது என்ன செய்வார் ? இந்த அவமானத்தை தாங்கி கொள்வாரா ? இல்லை மற்ற அரசியல்வாதிகளைப் போல கட்சி தாவி நிலைமையை சாதகமாக்கி கொள்வாரா ? இல்லை என்று தான் நினைக்கிறேன்.

படித்தவர் அரசியலுக்கு வரவேண்டும் என்கின்றனர். வந்தால் என்ன நடக்கிறது பார்த்தீர்களா ? முதல்வன் படத்தில் அர்ஜூன் சொல்வது போல அவர்களே அரசியல் செய்ய வைத்துவிடுவார்கள். காலம் பதில் சொல்லும்.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
282-284, londales st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


MS JEWELRY WORK SHOP
No:- 87, McIntyre Road, Sunshine North VIC 3020 (Inside Barber Shop)
WORKING DAYS
MON - SUN (10 AM TO 6 PM)
WEDNESDAY (CLOSED)
+61 469 033 450
காது குத்துதல், பழைய நகைகள் திருத்துதல், உடைந்த நகைகள்
ஒட்டுதல் மற்றும் புதிய நகைகள் என்பன செய்து கொடுக்கப்படும்
Ear Piercing, Old Jewelry Repair, Broken Jewelry Repair, and New Jewelry Will Be Provided

# மாத ராசிபலன்



### மேடம்

மேஷ ராசியில் பிறந்தவர்கள் தங்கள் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். பணியிடத்தில் அலைச்சல் நிறைந்திருக்கும். செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது. குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

### இடபம்

ரிஷப ராசியில் பிறந்தவர்களுக்கு காதல் வாழ்க்கையில் எதிர்பார்த்த மாற்றத்தை கொண்டு வரும் ஒரு மாதமாக இது அமையும். உடன் பிறந்தவர்களுடன் காணப்பட்ட மனஸ்தாபங்கள் முடிவுக்கு வரும், வீட்டில் மகிழ்ச்சியான தருணங்கள் அதிகரிக்கும். திடீர் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

### மிதுனம்

மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் புதிய தொழில் வாய்ப்புகளை கொண்டு வருகிறது. புதியவர்களின் அறிமுகமும் கிடைக்கும். பெரிய ஒப்பந்தங்களை தைரியமாக எடுத்து செய்வீர்கள், பணியிடத்தில் காணப்பட்ட பிரச்சினைகள் முடிவுக்கு வரும். கணவன், மனைவிக்கிடையிலான உறவு மேம்படும்.

### கடகம்

கடக ராசியில் பிறந்தவர்களுக்கு தலைமை பதவி கிடைக்கும் வாய்ப்பு காணப்படுகிறது. இம்மாதம் நடுப்பகுதியில் நிகழும் சூரியன் பெயர்ச்சி, கடக ராசி கொண்டவர்களின் ஆளுமைப் பண்புகளை மேம்படுத்துகிறது. இரும்பு, தங்கம், வெள்ளி தொடர்பான தொழில் செய்து வரும் நபர்களுக்கு சாதகமான ஒரு காலமாகவும் இது அமையும்.

### சிம்மம்

சூரியனை அதிபதியாகக் கொண்ட சிம்ம ராசியினர், கல்விக்காக அல்லது தொழில் வளர்ச்சிக்காக பயணங்கள் செய்யும் வாய்ப்பு காணப்படுகிறது. பணியிடங்களில் சுமுக நிலை தோன்றும். கடன் பிரச்சினைகள் தீரும். குடும்பத்துக்குள் நிலவிய பிரச்சினைகள் நீங்கி, இன்பம் பெருகக்கூடும்.

### கன்னி

ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கு பெயர் பெற்ற கன்னி ராசியினர், தங்கள் பொருளாதார நிலையை பலப்படுத்தும் வாய்ப்பினைப் பெறுவார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட மூலங்களில் இருந்து வருமானத்தைக் கொண்டு வரும் வாய்ப்பும் உங்களுக்கு கிடைக்கும். குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் உருவாகக்கூடும்.

### துலாம்

துலாம் ராசியினர் தங்கள் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்கும் ஒரு காலமாக இது பார்க்கப்படுகிறது. உறவில் நீங்கள் கடைப்பிடிக்கும் நேர்மை, நேர்மறையான திருப்பங்களை கொண்டு வரும். குழந்தை பாக்கியம் தொடர்பான நற்செய்திகளும் உங்களை தேடி வரும். தொழில் விடயங்களிலும் நல்ல பெறுபேறு வந்துசேரும்.

### விருச்சிகம்

விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் நிகழும் கிரக நிலை மாற்றங்கள், தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை கொண்டு வரும். காதல் வாழ்க்கை, திருமண வாழ்க்கையில் மகிழ்ச்சியான தருணங்களை மீட்டு கொண்டு வரும் வாய்ப்பும் உங்களுக்கு கிடைக்கும். நன்கு சிந்தித்தே முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

### தனுசு

தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு லாபகரமான ஒரு காலமாக இந்த ஏப்ரல் மாதம் இருக்கும். செய்யும் தொழிலில் போதுமான வருமானம் கிடைக்கும், கிடைக்கும் வருமானத்தை ஆக்கபூர்வமான முறையில் முதலீடு செய்து, எதிர்காலத்தை வளப்படுத்தும் வாய்ப்பும் பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் காணப்பட்ட மனஸ்தாபங்கள் முடிவுக்கு வரும்.

### மகரம்

மகர ராசியில் பிறந்தவர்கள் தங்கள் திறமைக்கான அங்கீகாரம், வெகுமதியைக் காணும் ஒரு காலமாக இது பார்க்கப்படுகிறது. பொருளாதார ரீதியாக நீங்கள் காணும் வளர்ச்சி, உங்கள் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியை கொண்டு வரும். சமூகம் சார்ந்த பொது நிகழ்ச்சிகளில் உங்கள் கருத்துகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

### கும்பம்

கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் வாழ்க்கை மற்றும் குடும்ப வாழ்க்கை இரண்டிலும் ஆதரவு கிடைக்கும் ஒரு காலமாக அமையும். தொழில் வாழ்க்கையில் உங்கள் இலக்கை அடைய, தேவையான வசதி வாய்ப்புகள் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் முழுமையான ஆதரவு கிடைக்கும்.

### மீனம்

மீன ராசியில் பிறந்தவர்கள் தங்கள் பணியிடத்தில் உயர் பதவிகளை அடையும் வாய்ப்பு காணப்படுகிறது. குடும்ப வாழ்க்கையிலும் தங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு கிடைக்கும் ஒரு உயரிய இடத்தை அடைவார்கள். கலைத்துறை, நடிப்பு துறையில் இருக்கும் நபர்களுக்கு சூழ்நிலைகள் சாதகமாக மாறும்.

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling? Sell Smart pay only 1% Commision.

**Selling your home is a big moment.**

That's why we focus on the most important things:
getting you the strongest result, with a smarter, fairer fee structure.

**With Sell Smart, you get:**

- Professional marketing
- Strategic buyer targeting
- Confident negotiation
- A premium, boutique experience

SELL SMART.
SAVE MORE.
ACHIEVE BETTER.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au

Level 10, 14 Mason St, Dandenong VIC 3175
havenhillrealestate.com.au

Terms and Conditions apply*


EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
FAST DELIVERY
ஆதவன் ATHAVAN
Cargo Service
Australia to Sri Lanka
Sri Lanka to Australia
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
ஆதவன் ATHAVAN
ஸ்ரீ AYYAPPA
ATHAVAN